# துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

19, சைத்ய வீதி, கொழும்பு 01
தொலைபேசி: 011-2439352, 011-2435161
இணையம்: www.portmin.gov.lk

செயலாற்றுகை அறிக்கை

2016

## அறிமுகம்

கடல் போக்குவரத்துத் துறையானது பொருளாதார மற்றும் பிராந்திய சமநிலை அபிவிருத்தி தொடர்பில் வலுவான துறையொன்றாக இருப்பதுடன் உலக பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய ஒருமைப்பாட்டின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கொன்றினையும் கொண்டுள்ளது. துறைமுகங்களானவை கரையோர நாடொன்றின் முக்கியமான பொருளாதார செயற்பாடொன்றை உருவாக்குவதுடன் அவை பொருளாதாரத்திற்கும் நாட்டிற்கும் வேறுபட்ட அளவிலான நன்மைகளைக் கொண்டுவரும்.

தீவுப் பொருளாதாரமொன்றைக் கொண்டுள்ள இலங்கையானது தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்கு இடையில் பௌதீக மற்றும் பொருளாதார இணைப்பினை மேம்படுத்தும் பிரதான மையமாக உள்ளதுடன் பிரதானமாக தென்னாசியாவிற்கான பிரதான கப்பல் பொருள்நகர்த்தல் கேந்திர துறைமுகமொன்றான கொழும்பிலுள்ள அதன் பிரதான துறைமுகத்திற்கூடாக பிராந்தியத்திற்குள்ளும் பிராந்தியத்திற்கு வெளியிலும் குறிப்பிடத்தக்க வியாபார மற்றும் முதலீட்டு இணைப்புக்களை மேம்படுத்துவதன் மூலம் எமது முக்கியமான பகுதியொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகமானது இலங்கையில் பிரதான வகிபாகங்களை கொண்டுள்ள அதேவேளை திருகோணமலை, காலி, காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை காரைநகர் மற்றும் அம்பாந்தோட்டை எனப் பெயர்கொண்ட வேறு சில துறைமுகங்களானவை, அவை கடல் மற்றும் தரைப் போக்குவரத்திற்கிடையிலான முக்கியமான இணைப்பொன்றாகவும், சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காகவும் செயற்படுகின்ற படியாலும் கூடுதல் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சமுதாய தொழிற்பாடொன்றிற்கு உதவுவதாலும், பின்தங்கிய பிரதேசங்களில் பொருளாதார செயற்பாடுகளுக்கான உதவியினை ஏற்படுத்துகின்றன.

இந்த அமைச்சின் வழிகாட்டலுடன் 2016 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் (SLPA) அடையப்பெற்ற சில பிரதான இலக்குகள் உள்ளன.

- கொழும்பு துறைமுக விரிவாக்க கருத்திட்டத்தில் இரண்டாவது ஆழ்கடல் முனைவிடமான கிழக்கு கொள்கலன் முனைவிட கருத்திட்ட அபிவிருத்தியானது 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி பகிரங்க ஆர்வ வெளிப்பாட்டு (EOI) அறிவித்தலுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் (ADB) அமைச்சரவையினால் நியமிக்கப்படும் இணக்கப்பேச்சுக் குழு மற்றும் பெறுகைக்குழு ஆகியவற்றின் மூலம் ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களின் மதிப்பீடானது நடைபெற்று வருகின்றது.
- அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் அல்லது அவற்றுக்கு அருகாமையிலுள்ள சாதகமான புவியியல் ரீதியான அமைவிடத்தை

பயன்படுத்துவதற்காக, கடலுணவு பதப்படுத்தல், LNG, கடல் மீதான எரிபொருள் களஞ்சியம், எரிபொருள் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள், கப்பல் திருத்தம் மற்றும் கப்பல் கட்டுமானச் செயற்பாடுகள் போன்ற கைத்தொழில்களுக்கும் அத்துடன் சீமெந்து, இலத்திரனியல், உரம், பெற்றோலியம் சார்ந்த கைத்தொழில்கள் போன்ற ஏனைய பல பதப்படுத்தல் கைத்தொழில்களுக்கும் கைவிடப்பட்ட காணிகளைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இலங்கையின் இளையோர்களுக்காக கூடுதல் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பிரேரிக்கப்பட்டுள்ளது.

- அம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈடாக 2016 ஆம் ஆண்டில் 366 குடும்பங்களுக்கு 892.5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.
- காலித் துறைமுகத்திலுள்ள சுற்றுலா கைத்தொழிலையும் யுனெஸ்கோ (UNESCO)வினால் உலக மரபுரிமை தளமாக கருதப்படும் காலிக்கோட்டையையும் பெருமளவு உயிர்ப்பல்வகைத்தன்மையை கொண்ட விசேட உயிர்ச்சூழல் தொகுதியொன்றாக கருதப்படும் ரூமஸ்ஸலவையும் மேம்படுத்துவதற்காக அக்கறை கொண்ட தரப்பினர்களிடமிருந்து முன்மொழிவு கோரிக்கையை (RFP) கோருவதற்குத் திட்டமிடப்பட்டது. காலித் துறைமுகத்தில் பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு உல்லாச படகுச் செயற்பாடுகளுக்காக முன்மொழிவு கோரிக்கை கோரப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலுள்ள துறைமுகங்களின் தற்போதய நிலமையினையும் நாளாந்த செயற்பாடுகளின் கலப்புத் தன்மையினையும் ஒன்றிணைக்கும் பொருட்டு, துறைமுகம் சார்ந்த துறைக்கு புதிய இயக்கப்பாட்டு மற்றும் முகாமைத்துவ முறையொன்றினை நடைமுறைப்படுத்துவது நியாயமானதாகப் பார்க்கப்படுகின்றது. பின்தங்கிய பிரதேசங்களுடன் தொடர்பு கொள்வதற்கான புதிய உட்கட்டமைப்புக்களை பூர்த்திசெய்தல் தொடர்பில் காத்திருக்கின்ற பாவனையாளர்களால் வெளிப்படுத்தப்படும் புதிய கடும் தேவைப்பாடுகளைக் கையாளும் போது கடல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறையினை பாதித்துள்ள மாற்றங்களுக்கு இத் துறைமுகமானது முகங்கொடுப்பதற்கு ஏதுவாக தொழிற்பாட்டு வட்டத்திலுள்ள பிரச்சினைகளை இந்த அறிமுகப்படுத்தப்படும் புதிய முறையானது தீர்த்துவைத்தல் வேண்டும்.

இந் நிலவரங்களின் பகுதியாக, ஈ.துறைமுகக் (E-Port) கோட்பாட்டினை அறிமுகம் செய்வதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தின் (IT) உதவிமூலமான துறைமுக பொருள் கையாள்கை முறைமையினை மேம்படுத்துதல் முக்கியமான படிமுறைகளில் ஒன்றாகும். சரக்கு மற்றும் துறைமுக கொள்கலன் ஓட்டம் பற்றிய தகவல் குறிப்பேட்டினை கையாள்வதற்கென பயனுறுதி வாய்ந்த முகாமைத்துவக் கருவி ஒன்றினை பயன்படுத்துவதன் மூலம் தற்போதய மனித தொழிற்பாட்டினை மீள ஒழுங்குபடுத்தலானது, உண்மை நேரத் தரவுகளுக்கான அடைவினை சகல அக்கறைதாரர்களும் கொண்டிருக்கும் துறைமுக இறுப்பனவுகள் பற்றிய உயர் தொழிற்பாட்டு முகாமையொன்றினை உறுதிப்படுத்துகின்றது என்பதுடன் இடைத்தொடர்புகளையும் இணைப்புக்களையும் பகுப்பாய்வு செய்தல் ஆர்வமிக்கதாக இருக்கும். சரக்கு ஓட்டம் மற்றும் கொண்டுசெல்லும் வாகனங்கள் / காவிச்செல்லும் வாகனங்களின் நிலை குறித்தான தகவல்களின் பரிமாற்றத்துடன் தொடர்புறும் உண்மைத் தொழில்நுட்பப் புரட்சி ஒன்றுக்கூடாக”வேலைசெய்யும் விதத்தில்” உண்டாகும் மாற்றத்திலான விளைவாக இது அமையும்.

கப்பல் மற்றும் கடல்சார் துறையின் தேவைப்பாடுகளைச் சமாளிக்கும் பொருட்டு, அரச தனியார் பங்குடமை (PPP) அல்லது கூட்டு முயற்சியாக (JV) தனியார் துறையினை உள்ளடக்கிப் பூர்த்திசெய்யப்படும் பொருட்டு மீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது பிரேரிக்கப்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில், கிழக்கு கொள்கலன் முனைவிடத்திலும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்திலும் துறைமுக தொழிற்பாடு தாபிக்கப்படுகின்றது. அரச தனியார் பங்குடமை (PPP) முறையானது அரசாங்கத்திற்கோ அல்லது நிறுவனத்திற்கோ நிதிச் சுமை எதையும் உருவாக்காது. ஆதலினால் துறைமுகம் சார்ந்த துறையிலான பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் அரச தனியார் பங்குடமையினை (PPP) மையப்படுத்தியுள்ளன.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இந்த அமைச்சின் கீழ் வரும் மற்றொரு நிறுவனமான இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் கப்பல் தொகுதிக்கான “Mv. Ceylon Breeze” மற்றும் “Mv. Ceylon Princess” எனப் பெயர் கொண்ட இரண்டு படகுகளை கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்ததுடன் கட்டளைத் தளபதி வகிபாகத்தின் கீழ் கடற்படைக் குழுவை இரண்டால் அதிகரிக்கக் கூடியதாகவும் இருந்தது. அவற்றின் கன்னிக் கடற் பயணங்களானவை சீனாவின் வெய்ஹாயிலுள்ள கப்பற் தளத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் திகதியும் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதியும் ஆரம்பிக்கப்பட்டன. இக்கப்பல்களானவை திரள் சரக்குகளை இடநகர்த்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அவை கடலோடிகளுக்கு பயிற்சியளிப்பதற்குமென வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் போது அரசாங்க மற்றும் தனியார் துறை சமுத்திரப் பயிற்சி நிறுவகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய 52 பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் பயிற்சியளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

சமுத்திரம் சார்ந்த விடயங்களுக்கு மேலதிகமாக, கடலோடிகளின் பாதுகாப்பு மற்றும் அங்கீகாரத்தையும் சமுத்திரம்சார் செயற்பாடுகள் பற்றியும் உறுதிப்பாட்டை வழங்கும் சர்வதேச ஒழுங்கு விதிகள் மற்றும் நியமங்களுடன் இயைந்தொழுகும் சர்வதேச சமுத்திரம்சார் அமைப்பினால் 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கட்டாயக் கணக்காய்விற்கும் வணிகர் கப்பல் செயலகமானது வெற்றிகரமாக முகம்கொடுத்தது.

அதேவேளையில் ISO 9001:2008 என்னும் தர முகாமைத்துவ சான்றிதழை அவற்றினால் இற்றைப்படுத்தக் கூடியதாக இருந்தது. கடலோடிகளின் அடையாள ஆவணத்துடன் ஒத்திசையும் பொருட்டு சிறந்த பாதுகாப்பு பண்புகளுடன் கூடிய, ஆட்தோற்றப் பதிவுடனான நிறைவுப்படுத்துகைச் சான்றிதழ் மற்றும் தொடர் விடுவித்தல் சான்றிதழ் ஆகியவற்றினை வழங்குவதற்கான இலத்திரனியல் முறைமையொன்றை வணிகர் கப்பல் செயலகமானது அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும் துறைமுகம், கப்பல் துறை மற்றும் சமுத்திரம் சார் துறைகளினது சகல அக்கறைதாரர்களிடமிருந்தும் ஒருங்கிணைப்பினைப் பெற்றும் கொள்ளும் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஆலோசனை சபை மற்றும் முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு குழு ஆகிய பெயர் கொண்ட இரு குழுக்களை இந்த அமைச்சினால் தாபிக்கக்கூடியதாக இருந்தது. இந்த அமைச்சின் விடயநோக்கெல்லையின் கீழ் வரும் கொள்கைகளை வகுத்து மீளாய்வு செய்வதும் கருத்திட்டங்களை இனங்காண்பதுமான செய்முறையில் இவ் இரு குழுக்களும் பங்குபற்றியிருந்தன.

**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையானது PED/27 ஆம் இலக்கமுடைய அரசாங்கதொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.**

## பகுதி I


அமைச்சின் பொது தகவல்களும், பௌதிக மற்றும் நிதி முன்னேற்றமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பகுதி II

அமைச்சின் விடய நோக்கெல்லைக்கு வரும் நிறுவனங்களாவன,

- வணிகக் கப்பல் செயலகம்
- இலங்கை துறைமுக அதிகாரசபை
- இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

2016 ஆம் ஆண்டினுள் எய்தப்பட்ட பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படுகின்றது.



## மாண்புமிகு அமைச்சரின் செய்தி

### எதிர்வரும் சகாப்தம் ஊழல், முறைக்கேடுகளை ஒழிக்கும் சவால்களை வெற்றிகொள்ளும் ஆண்டுகளாகும் ........

கடந்த ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு பெற்ற முன்னேற்றம் தொடர்பில் 2016 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை சார்பில் செய்தி ஒன்றை வழங்குவதில் மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டு நான் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சராக செயலாற்றும் இரண்டாவது வருடமாகும். முதலாம் ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களில் முக்கியமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழல், முறைக்கேடு மற்றும் வீண்விரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். இந்த ஆண்டில் எமது அடிப்படை நோக்கமானது இந்த நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கும் மோதல் நிலமைகளுக்கும் குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்குவதாகும்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கீழ் முக்கியமாக இரண்டு அரசாங்க தொழில் முயற்சிகள் உள்ளன. அவையாவன இலங்கை துறைமுக அதிகார சபையும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனமும் ஆகும். இவற்றுள் இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த கடன் அளவு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 233 பில்லியன் ரூபாவாகும். இந்த கடனில் 67 சதவீதமானது அம்பாந்தோட்டை துறைமுகம் சார்பில் உயர் வட்டிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடனாகும். "சிலோன் பிறீஸ்" மற்றும் "சிலோன் பிரின்சஸ்" ஆகிய கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட கடன் தொகையானது 80 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும் எமது சுயாதீனமான அவதானிப்பாக இருந்தது இந்த கப்பல்களுக்கு செலுத்திய தொகையை நியாயப்படுத்த முடியாது என்பதாகும். வருட ஆரம்பத்தில் நாம் முகம் கொடுத்த முக்கிய சவாலாக அமைந்தது வர்த்தக திட்டமொன்று அல்லது சாத்தியத் தகவாய்வு அறிக்கையொன்று இல்லாமல் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட கூடிய கடன் சுமையின் மீது நிறுவனத்தை நடாத்திச் செல்வதாகும். வருட இறுதியில் மீள திரும்பி பார்க்கையில் இந்த பெரும் சவாலானது பெருமளவில் முகாமித்துக் கொள்வதற்கு இயலுமானது என்பதை உண்மையாக வெளிப்படுத்துகின்றேன். மிக முக்கியமானது பாரிய கடன் சுமை நிலவினாலும்

தொழில் பாதுகாப்பையும் நிறுவனத்தின் பாதுகாப்பையும் சமமாக பேணுவதற்கு கடந்த ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டலாகும். ஆயினும், எமது முன்னிலையில் உள்ள சவால்களானது முடிவடையவில்லை என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அடுத்து வரும் ஆண்டில் எமது அமைச்சின் நோக்கமாவது திட்டவட்டமான வெற்றி குறியிலக்குகளை நோக்கி நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் சரியாக கொண்டு செல்வதாகும். இதன்போது இலங்கையை உலகின் முக்கிய கொள்கலன் கையாள்கை கேந்திர நிலையமொன்றாக மாற்றுவது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ள குறியிலக்காகும். கரையோர பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குமுறைப்படுத்துதல் உட்பட போட்டிகரமான வினைதிறன் வாய்ந்த துறைமுக, கப்பல் மற்றும் சமுத்திர சந்தையொன்றை உருவாக்குதல் வணிக கப்பல் செயலகத்திற்கு கையளிக்கப்பட்ட பொறுப்பாகும். இந்த சகல நோக்கங்களையும் குறியிலக்குகளையும் பூர்த்தி செய்து கொண்டு நவீன சர்வதேச வர்த்தகத்தில் கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளை இணைக்கும் துறைமுக, கப்பல் மற்றும் சமுத்திர கேந்திர நிலையமொன்றாக மாற்றுவது எமது அமைச்சின் அடிப்படை நோக்கமாகும்.

இன்று நாம் கடந்து சென்று கொண்டிருப்பது சனாதிபதி - பிரதம அமைச்சர் முதன்மையாகக் கொண்ட நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வருடமாகும். சர்வதேச சமூகம் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை மெச்சத்தக்கதாகும். சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பிரபல்யம் வாய்ந்த கம்பனிகளும் இன்று இலங்கையில் முதலீடு செய்வதற்கு இணைந்த வண்ணம் உள்ளன. இந்த புதிய போக்கின் பயனை பெற்றுக்கொண்டு எமது நாட்டின் துறைமுக, கப்பல் மற்றும் சமுத்திர துறைகளை மேலும் அபிவிருத்தி செய்யலாம் என்பது எனது நம்பிக்கையாகும். அதற்கு தேவையான வசதிகளை வழங்குவதுடன் நிற்காமல் சகல தரப்பினர்களுக்கும் வழிகாட்டுவதற்கும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு தயாராயுள்ளது. இலங்கையில் முன்மாதிரியான அமைச்சொன்றாக மாற்றி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் முதன்மையானதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சை கொண்டுவரும் குறியிலக்கை வெற்றி கொள்வதற்கு எதிர்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்பதையும் நான் இறுதியாக வெளிபடுத்துகின்றேன்.

**அர்ஜூன ரணதுங்க,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்**



## மாண்புமிகு பிரதி அமைச்சரின் செய்தி

### சவால்களை இனங்கண்டு வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்லல்....

2016 ஆம் ஆண்டில் உள்ளக ரீதியாகவும் வெளி வாரியாகவும் எழுந்த சவால்களை வெற்றி கொண்டு நாங்கள் சிறந்த எதிர்கால பயணத்திற்கு நுழைந்தோம். ஆதலால் இந்த ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தி ஒன்றை திருப்தியுடன் வழங்குகின்றேன். இதற்கமைவாக 2020 ஆம் ஆண்டில் உலக கப்பற்றுறையின் பிரதான பரிமாற்றல் கேந்திர நிலையமொன்றாக இலங்கையை கொண்டுவரும் எமது பிரதான நோக்கத்தினை வெற்றி கொள்வதற்கு பாரிய அர்ப்பணிப்புடன் நாம் இந்த ஆண்டினுள் செயலாற்றுவோம். அமைச்சின் கீழுள்ள வணிக கப்பல் செயலகம் சர்வதேச கப்பல் தொழிலுக்கு அங்கீகாரத்தை பெற்று உயர் தரத்திலான தொழில்சார் கப்பலோடிகளை உருவாக்குவதற்கு பங்களிப்பு நல்கியுள்ளது. சகல தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளிலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதானது 2016 ஆம் ஆண்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் மிகச்சிறப்பாக திட்டமிட்டு தரத்தினை பாதுகாக்கும் விதத்தில் குறியிலக்குகள் அடையப்படும். அரசாங்க தொழில் முயற்சி நிறுவனமொன்றாக இலங்கை கப்பல் கூட்டத்தாபனம் கொள்வனவு செய்த இரண்டு கப்பல்களின் ஊடாக நிலக்கரி ஏற்றி இறக்கலுக்கான குறியிலக்கு 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. தனியார் கடற்றொழில் பாடசாலைகளைச் சேர்ந்த பயிற்சி பெறும் கப்பலோடிகளுக்கு பயிற்சியளித்தல் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுகின்றது. இடையூறுகள் கண்டறியப்பட்டு அவை இந்த ஆண்டில் மிகச் சிறந்த முறையில் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபை அமைச்சின் பிரதானமான தொழில் முயற்சி ஒன்றாக 2017 ஆம் ஆண்டில் கொழும்பு, திருகோணமலை மற்றும் மாகம்புர துறைமுகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து உயர் தரத்திலான சேவைகளை வழங்குவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளன. காலி துறைமுகத்தை சுற்றுலா துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்வது நடப்பாண்டில் எமது பிரதான பணியொன்றாகும். காலியை மையமாகக் கொண்டு தெற்கின் சுற்றுலா துறையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் போது காலித்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யாது

அதனை செய்யமுடியாது. ஆதலால் காலித்துறைமுக அபிவருத்தி அரசாங்கத்தின் பொறுப்பொன்றாக கருதி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் எமது குறியிலக்குகளை வெற்றி கொள்வதற்கு எம்முன்னால் காணக்கிடைக்கும் பிரதான தடை இலங்கை துறைமுக அதிகாரபையினால் திருத்தப்பட வேண்டிய ஆகக் கூடுதலான கடன் தொகையை குறிப்பிடலாம். இந்த தொகையை தீர்ப்பதற்காக நாம் பின்பற்றும் நடவடிக்கைகள் நிறுவகத்திற்கும் நாட்டிற்கும் பாதுப்பினை ஏற்படுத்துத்தல் ஆகாது. அமைச்சினதும் இந்த நிறுவனங்களினதும் அடையாளத்தை பாதுகாத்து தனியார் முதலீட்டாளர்களுடன் இதற்கான ஒப்பந்தங்களை செய்து கொண்டு வெற்றிகரமாக அபிவிருத்தியை பெற்றுகொள்ள முடியுமென்பது எனது கருத்தாகும். இதன்போது அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் பிரதம அமைச்சர் அவர்களினதும் வழிகாட்டலின் மீது மாண்புமிகு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க அவர்களினால் நிறைவேற்றப்படும் பணியை நட்புறவுடன் மெச்சுகின்றேன். அமைச்சின் செயலாளர் உட்பட பதவியணியினரும், அமைச்சின் விடய நோக்கெல்லைக்குள் வரும் சகல நிறுவனங்களினதும் தலைவர்கள் அடங்கலாக எல்லா தரங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கடந்த காலப்பகுதியுள் வழங்கிய ஒத்தாசயை மெச்சி 2017 ஆம் ஆண்டிலே வெற்றிகரமான எதிர்கால பயணத்திற்கு அதே வகையில் ஒத்தாசையை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன். அதற்காக நான் முழுமையான அர்ப்பணிப்புடன் மாண்புமிகு அமைச்சர் முதன்மையாக சகலருக்கும் ஒத்தாசை வழங்குவேன் என்பதையும் வெளிபடுத்துகின்றேன்.

**நிஷாந்த முத்தஹெட்டிகம,**
காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதி அமைச்சர்.



## செயலாளரின் செய்தி

இலங்கை பொருளாதாரத்தின்பால் விசேட தாக்கத்தை செலுத்தக்கூடிய அமைச்சொன்றாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளராக நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கு கிடைத்தமை பெரும் பேறாக கருதுவதோடு, 2016 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமை தொடர்பிலும் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பு வழங்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையும் அதேபோன்று வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனமும் வணிக கப்பல் செயலகமும் எமது அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களாகும். மாண்புமிகு அமைச்சரினதும் மாண்புமிகு பிரதி அமைச்சரினதும் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளின் மீது 2016 ஆம் ஆண்டில் இந்த நிறுவனங்களை உரிய முறையில் கையாள்வதற்கு இயலுமானமை சம்பந்தமாக பெருமை அடைகின்றேன்.

இலங்கையை துரித அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்லும் கடும் தேவை முன்பில்லாதவாறு எழுந்துள்ள இந்த காலக்கட்டத்தில் குறித்த நோக்கத்தை வெற்றி கொள்வதற்கு இந்த அமைச்சிற்கு மிக முக்கியமான பல பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் முகம்கொடுக்கவேண்டி வந்த சவால்களுக்கு மத்தியிலும் பதிவு செய்யக்கூடிய இலாபத்தை பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையானது வெற்றி கண்டுள்ளது. அதேபோன்று உலகின் சிறந்த கொள்கலன் கையாளும் 30 துறைமுகங்களுள் கொழும்பு துறைமுகத்தையும் கொண்டு வருவதற்கு இயலுமானமையும் வெற்றியாக கருதுகின்றேன். அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்டத்திற்காக சவீகரிக்கப்பட்ட காணிகள் சார்பில் நட்டஈடு செலுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் 1 பில்லியன் ரூபாவை குறித்தொதுக்குவதற்கு இயலுமானமையும் கூட நாம் பெற்ற வெற்றியாகும் என கருதுகின்றேன். திருகோணமலை துறைமுகம் சார்ந்த கைத்தொழில்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் காலி துறைமுக அபிவருத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தடையாகவிருந்த UNESCO நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெற்றுகொள்வதற்கு கடந்த ஆண்டில் இயலுமானது.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட “சிலோன் பிறீஸ்” மற்றும் “சிலோன் பிறின்சஸ்” ஆகிய கப்பல்கள் 2016 ஆம் ஆண்டில் அதன் செயற்பாட்டு பணிகளை ஆரம்பித்ததோடு அதன் மூலம்

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கும் அதேபோன்று இலங்கையர்களுக்கு மிக உயர்ந்த சம்பளம் பெறும் வாய்ப்பு உள்ள கப்பல் துறையில் தொழில் பெற்று கொள்ளும் வழி திறக்கப்பட்டு பயிலிளவல் கெடட் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியினை வழங்குவதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கமைவாக 2016 ஆம் ஆண்டில் 22 பயிலுநர் கப்பலோடிகளுக்கு பயிற்சி வாய்ப்பு உரித்தாக்கப்பட்டுள்ளது.

வணிக கப்பல் செயலகமானது கப்பற்றுறையில் சேவை புரிந்து கொண்டிருக்கும் பல்வேறு தரங்களைச் சேர்ந்த பதவியணியினர்கள் சார்பில் விசேட பணிகளை நிறைவேற்றுகின்றதோடு, கப்பலோடிகளுக்கான தேர்ச்சி சான்றிதழ் மற்றும் தொடர்ச்சியான விடுவிப்பு சான்றிதழ் பாதுகாப்பான அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வழங்குவதற்கு 2016 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோன்று ISO 9001 : 2008 தர முகாமைத்துவத்தை இற்றைப்படுத்தும் கணக்காய்வு மற்றும் உறுப்பு நாடுகளினால் சர்வதேச சமுத்திர சமவாயங்கள் முறையாக நடைமுறைப்படுத்துவதனை அத்தாட்சிப் படுத்தும் நோக்கில் IMO கட்டாய கணக்காய்வினை செய்வதற்கும் இயலுமானவை வணிக கப்பல் செயலகம் கடந்த ஆண்டில் பெற்ற வெற்றிகளாக கருதலாம். மேலும் வணிக கப்பல் செயலகத்தின் பணிகளை விரிவு படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உப அலுவலகமொன்றை தாபிப்பதற்கும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சகல வெற்றிகளையும் அடைவதற்கு உரிய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி எம்மை ஊக்குவித்தமை சம்பந்தமாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன ரணதுங்க அவர்களுக்கும் பிரதி அமைச்சர் மாண்புமிகு நிஷாந்த முத்துஹெட்டிகம அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்வதோடு, இந்த வெற்றிகளை அடைவதற்கு ஒத்தாசை வழங்கிய நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும் அதேபோன்று அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்வதற்கு இதனை வாய்ப்பாக எடுத்து கொள்கின்றேன்.

**எல்.பி.ஜயம்பதி,**
செயலாளர், (துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு)

# பொருளடக்கம்

## பகுதி I


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு. | 117 |


## பகுதி II


| | பக்க இலக்கம் |
|---|---|
| 2. வணிக கப்பல் செயலகம் | 143 |
| 3. இலங்கை துறைமுக அதிகாரசபை | 157 |
| 4. இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் | 189 |

# பகுதி I

# 01. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

## நோக்கு

தெற்காசிய வலயத்தில் உயர் போட்டிமிகு கடல்சார் சேவைகளை வழங்கும் மத்திய நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதனூடாக அனைத்து சேவை பயன்பாட்டாளர்களுக்கும் நட்புரீதியான உயர் நிலையிலான கடல்சார் சேவைகளை வழங்குதல''


## பணிக்கூற்று

"தேசிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் கடல்சார் போக்குவரத்து துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் பொருட்டு போட்டி நிலைமைக்கு ஈடுகொடுக்கக்கூடிய துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறையில் தரமான சேவைகளை வழங்குவதற்கு ஏதுவான வகையில் மிகவும் பொருத்தமான கொள்கை வரையறையொன்றினை தயாரித்தல் மற்றும் செயற்திறனான பொறிமுறையொன்றினை உருவாக்குதல்''

## 1.1 நோக்கங்கள்

- அமைச்சின் விடய நோக்கெல்லைக்குரிய நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒருங்கிணைத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- அமைச்சின் விடய நோக்கெல்லைக்குரிய நிறுவனங்களின் பணிகளை முறையாக நடாத்திச்செல்வதற்குத் தேவைப்படும் சட்டக்கட்டமைப்பினை அறிமுகப்படுத்துதல்.
- துறைமுக மற்றும் கப்பற்றுறை பணிகளுக்கு உரியதாக சேவை நாடுநர்களுக்கு புதிய கையாள்கை தகவல் திறன்களை அறிமுகப்படுத்துதல்.
- துறைமுக மற்றும் கப்பற்றுறை பணிகள் சம்பந்தமாக தேசிய கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முனைப்பான பொறிமுறையொன்றை தயாரித்தல்.
- கப்பல் முகவர்கள், கொள்கலன் நிலைய தொழிற்பாட்டாளர்கள், கப்பற் சரக்குகளை முன்வைப்பவர்கள், கப்பல் உரிமைகளற்ற பொது போக்குவரத்து சேவைகளை வழங்குபவர்கள், சுற்றுலா முகவர்கள் உட்பட வேறு சேவைகளை வழங்குபவர்களுக்கு மிகச்சிறந்த முனைப்பான, வர்த்தக நட்புறவுமிக்க ஒழுங்கு முறையையும் மேற்பார்வையையும் உருவாக்குதல்.

## 1.2 துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கட்டமைப்பு




# 1.3 துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் பதவியணி விபரம்

## 31-12-2016 ம் ஆண்டிற்கான உறுதிச் செய்யப்பட்ட மற்றும் தற்போதுள்ள கட்டமைப்பு

| பதவி | சேவை | தரம் | சம்பள குறியீடு | உறுதிச் செய்யப்பட்ட கட்டமைப்பு | தற்போதுள்ள கட்டமைப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| செயலாளர் | SLAS | விசேட | SL 4 | 01 | 01 | 0 |
| மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | SLAS | விசேட | SL 3 | 01 | 01 | 0 |
| மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | SLAS | விசேட | SL 3 | 01 | 01 | 0 |
| பிரதான நிதி அதிகாரி | SLAS | விசேட | SL 3 | 01 | 01 | 0 |
| மூத்த பிரதிச் செயலாளர் | SLAS | I | SL 1 | 01 | 01 | 0 |
| அத்தியட்சகர் (அபிவிருத்தி) | SLAS | I | SL 1 | 01 | 01 | 0 |
| அத்தியட்சகர் (திட்டமிடல்) | SLPS | I | SL 1 | 01 | 0 | 01 |
| பிரதான கணக்காளர் | SLACS | I | SL 1 | 01 | 01 | 0 |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் | SLACS | I | SL 1 | 01 | 01 | 0 |
| அத்தியட்சகர் (பொறியியல்) | SLES | I | SL 1 | 01 | 0 | 01 |
| உதவிச் செயலாளர் | SLAS | III/II | SL 1 | 01 | 01 | 0 |
| கணக்காளர் | SLACS | III/II | SL 1 | 01 | 0 | 01 |
| பிரதி/ உதவி அத்தியட்சகர் (அபிவிருத்தி) | SLAS | III/II | SL 1 | 02 | 01 | 01 |
| பிரதி/ உதவி அத்தியட்சகர் (திட்டமிடல்) | SLPS | III/II | SL 1 | 01 | 01 | 0 |
| நிர்வாக அதிகாரி | PMAS | Supra | MN 7 | 01 | 01 சட்டம்.) | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | TS | II/I | MN 6 | 01 | 01 | 0 |
| அபிவிருத்தி அதிகாரி | DFS | | MN 4 | 10 | 11 | -1 |
| செயலாளருக்கான உதவிச் செயலாளர் | Contract | | 22,250/- மாதாந்தம் | 01 | 01 | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் | PMAS | III/II/I | MN 2 | 24 | 12 | 12 |
| சாரதி | DS | III/II/I/ விசேட | PL 3 | 13 | 09 | 04 |
| காரியாலய உதவியாளர்கள் | OES | III/II/I/ விசேட | PL 1 | 12 | 09 | 03 |
| வீடியோ கலைஞர் | | | 14,425/- மாதாந்தம் | 01 | 01 | 0 |
| புகைப்பட கலைஞர் | | | 14,425/- மாதாந்தம் | 01 | 01 | 0 |

## 1.4 பிரதான கிளைகள்


திட்டமிடல்,
அபிவிருத்தி கிளை
கணக்காய்வுக்
கிளை
துறைமுகங்கள் மற்றும்
கப்பற்றுறை அமைச்சு
கணக்குக் கிளை
நிருவாகக் கிளை

## 1.5 2016 ஆம் ஆண்டில் அமைச்சின் பிரதான கிளைகளினால் செய்யப்பட்ட முக்கிய பணிகள்

### 1.5.1. நிருவாகக் கிளை

#### 1.5.1.1. பதவியணி விபரம்

(அட்டவணை 1 ; *பதவியணி விபரம்- நிருவாகக் கிளை*)

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| மேலதிக செயலாளர் (நிவாகம், நிதி) | 1 | 1 | - |
| சிரேட்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| சட்ட அலுவலர் | 1 | - | 1 |
| நிருவாக உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | 1 | 1 | - |
| அபிவிருத்தி உத்தயோகத்தர் | - | 2 | (2) |
| முகாமைத்துவ உதவியாளர் | 15 | 7 | 8 |
| அலுவலக பணியாளர் | 4 | 3 | 1 |

### 1.5.1.2. பிரதான பணிகள்

**(i) பாராளுமன்ற அலுவல்கள்**

இந்த அமைச்சின் விடய நோக்க எல்லைக்கு அமைவாக செயலாற்றகையில் உருவாகும் பிரச்சனைகளை தீர்க்கும் போதும், பாராளுமன்றத்தினால் பலவேறுபட்ட சட்டங்களை அங்கீகரிக்கையில் அத்துடன் அரசாங்க நிருவாக மற்றும் நிதி பணிகளை செயகையில் உருவாகும் பிரச்சினைகளை தீர்க்கும்போதும் பாராளுமன்றம் தொடர்புபடும் சகல பணிகளும் இந்த விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

2016 ஆம் ஆண்டினுள்,

- நிலையியற் கட்டளை 23/2 இன் கீழ் கேள்விக்கு பதிலளித்தல்.
- மாண்புமிகு பிரதம அமைச்சரிடம் கேள்வி கேட்கும் சந்தர்ப்பத்தின் கீழ் கேள்விகளுக்கு பதிலளித்தல்.

**(ii) வாய்மொழிமூல பதில்கள் எதிர்பார்க்கப்படும் பாராளுமன்ற வினாக்கள்**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் இந்த அமைச்சின் விடய நோக்கு எல்லை சம்பந்தமாக வினாவும் வினாக்கள் சார்பில் மாண்புமிகு அமைச்சரினால் வழங்கப்படும் வாய்மொழிமூல பதில்கள் மற்றும் அது சம்பந்தமான பின்னணி அறிக்கைகள் வழங்கப்படும்.

2016 ஆம் ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் வினவப்பட்ட எட்டு வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளதோடு அது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### (iii) பாராளுமன்ற பொது மனு குழு சம்பந்தமான பணிகள்

தறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்போது சேவை புரிந்துகொண்டிருக்கும் அத்துடன் சேவை புரிந்த உத்தியோகத்தர்களினதும் அதேபோன்று ஏனைய தொடர்புடைய தரப்பினர்களினதும் முறைப்பாடுகள் சம்பந்தமாக செயலாற்றுதலும் நிவாரணம் வழங்குதலும் இந்த குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொது மனு குழுவுக்கு கிடைக்கப்பெற்ற 6 முறைப்பாடுகள் தொடர்பில் பதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### (iv) சட்டம் மற்றும் நீதிமன்ற அலுவல்கள்

அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புளை நிறைவேற்றும் போது எழுந்த சட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 22 வழக்குகள் சம்பந்தமாக இந்த திணைக்களத்திற்கு பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### (v) மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமான பணிகள்

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் சம்பந்தமாக புலனாய்வு செய்து சிபாரிசுகள் வழங்கப்படும். பிற அரசாங்க நிறுவனங்கள் அதேபோன்று இந்த அமைச்சு உட்பட துணை நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பல்வேறுபட்ட தரப்பினர்களினால் செய்யப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக விசாரனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் துறைமுகங்களை பயன் படுத்துபவர்களின் சங்கத்தினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கான பதில்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### (vi) மோட்டார் வாகன உரிமப்பத்திரங்ளை வழங்குதல்

2016-07-14 ஆம் திகதியடப்பட்டதும் 01/2016 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான வர்த்தக, முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கைக்கு அமைவாக சலுகை அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபையை சேர்ந்த 6 உத்தியோகத்தர்களுக்கும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 2 உத்தியோகத்தர்களுக்கும் வாகன இறக்குமதி உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### (vii) விதவைகள், அனாதைகள் ஒய்வூதியத்திற்கு பதிவுசெய்தல்

2016 ஆம் ஆண்டில் விதவைகள், அனாதைகள் ஒய்வூதியம் சார்பில் விதிமுறைக்கு அமைவாக 7 உத்தியோகத்தர்கள் பதிவு செய்யப்பட்டார்கள்.

### (viii) ஒய்வூதிய பணிகள்

அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றதோடு அவர்களுடைய ஓய்வூதியத்தை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### (ix) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை செயற்பாடுகள் சார்பில் முறையான உடன்பாடுகளை பேணுவதற்குத் தேவையானவாறு 69 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 2016 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## (x) டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை முழுவதும் துரிதமாக பரவிவரும் டெங்கு காய்ச்சல் நோயை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு செயற்பாட்டு ரீதியிலான பங்களிப்பினை வழங்கும் நோக்கில் அமைச்சின் மனையிடத்திலும் அதன் துணை நிறுவனங்களின் மனையிடங்களிலும் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை கண்டறிதலும் அவற்றை இல்லதொழிப்பதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக அமைச்சினால் பின்வரும் நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன.

- டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அவற்றின் முறையான செயற்பாடு தொடர்பில் தொடர்ச்சியான மேற்பார்வையினை செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- மேற்போந்த குழுவினால் வாரத்திற்கு ஒரு தடவை அமைச்சு மனையிடத்தினுள்ளும் கட்ட்டங்களினுள்ளும் நுளம்பு பரவக்கூடிய இடங்களை பரிசீலனை செய்தல், இந்த இடங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சு கட்ட்டத்தை சுற்றியுள்ள காண்களில் நீர் உரிய வகையில் வழிந்தோடகூடியவாறு திருத்துதல், நீர் தேங்கும் இடங்களில் நுளம்பு ஒழிப்பு திரவங்களை பயன்படுத்துதல்.
- டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு அமைச்சு மனையிடத்தினுள் புகை அடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- மாதாந்தம் டெங்கு சம்பந்தமான அறிக்கைகளை தயாரித்தலும் இந்த அறிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்தலும்.

## (xi) பயிற்சியும் செயலமர்வும் 2016

### உள்நாட்டு பயிற்சி

- பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சினால் நடாத்தப்பட்ட தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகள் சம்பந்தமான செயலமர்வுக்கு அரசாங்க முகாமைத்துவ சேவையைச் சேரந்த மூன்று உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்வித்தமை.
- அரசாங்க நிதி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட USAID செயலமர்வு சார்பில் இரண்டு உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்வித்தமை.
- சம்பள முகாமைத்துவம் தொடர்பிலான செயலமர்வு சார்பில் இரண்டு உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்வித்தமை.
- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள் / உள்ளக கணக்காய்வாளர்கள் தொடர்பிலான பாடநெறிக்கு உத்தியோகத்தர் ஒருவரை கலந்து கொள்ளச் செய்வித்தமை.

**வெளிநாட்டு பயிற்சி**

- ஆசிய நாடுகளுக்கான துறைமுக முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு - சீனா - இரண்டு உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்வித்தமை.

### (xii) விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- 68 ஆவது தேசிய சுதந்திரதின விழா
- சிங்கள தமிழ் புத்தாண்டு விழா
- தேசிய சுற்றாடல் தின விழா

## 1.5.2. கணக்குக் கிளை

### 1.5.2.1. பதவியணி விபரம்

(அட்டவணை 2 ; *பதவியணி விபரம்- கணக்குக் கிளை)*

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| பிரதான நிதி உத்தயோகத்தர் | 1 | 1 | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - |
| கணக்காளர் | 1 | - | 1 |
| அபிவிருத்தி உத்தயோகத்தர் | 4 | 4 | 3 |
| முகாமைத்துவ உதவியாளர் | 7 | 4 | 3 |
| அலுவலக பணியாளர் | 4 | 1 | 3 |

1.5.2.2. **பிரதான பணிகள்**

- வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
- கட்டுநிதி கணக்குகளை தயாரித்தல், நிதி ஓட்ட கூற்று, மாதாந்த கட்டுநிதி ஒப்பீட்டு அறிக்கைகளை உரிய திகதியன்றில் தயாரித்தல்.
- வங்கிப் பணிகளை கையாள்தலும் கொடுப்பனவுகளை செய்தலும்.
- தனிப்பட்ட வேதனாதிகள், மேலதிக வேலை நேர கொடுப்பனவு உட்பட ஏனைய கொடுப்பனவுகளைச் செய்தல்.
- பெறுகை திட்டத்திற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல், உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல், வழங்கல் முகமைத்துவம்.
- பொருட்கள் அளவாய்வினை உரிய திகதியன்று தயாரித்தல்.
- பெறுகை திட்டத்திற்கு அமைவாக நிலையான சொத்துக்கள் அட்டவணையைப் பேணுதல்.
- நிதி அறிக்கைளையும் முற்பண B கணக்கையும் தயாரித்தல்.
- கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளித்தல்.

- 2016 ஆம் ஆண்டில் அமைச்சரின் அலுவலகத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடான 137.082 மில்லியன் ரூபாவிற்கான 91.9 கொண்ட செலவு சதவீதத்தையும் அமைச்சின் நிறுவன மற்றும் நிருவாக பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடான 160.518 மில்லியன் ரூபாவிற்கான 89.37 கொண்ட செலவு சதவீதத்தையும் பேணுதல்.

### 1.5.2.3 2016 செலவு அறிக்கை

(அட்டவணை 3: *செலவு அறிக்கை - அமைச்சரின் அலுவலகம்*)

| நிகழ்வு 1 – செயற்பாடுகள் நடவடிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கருத்திட்டம் 1 - அமைச்சரின் அலுவலகம் | | | | | | | |
| விடய இல | வகுதி / விடயம் | மதிப்பீடு 2016 (ரூபா) | நி.நி 66 | குறைநிரப்பு மதிப்பீடு 2016(ரூபா) | திருத்தப்பட்ட மதிப்பீடு 2016 (ரூபா) | திரண்டசெலவு (ரூபா) | செலவு நூற்று வீதம் (%) |
| | **மீண்டுவரும்செலவினம்** | | | | | | |
| | **தனிப்பட்ட வேதனாதிகள்** | | | | | | |
| 1001 | சம்பளம், பிற | 8,500,000.00 | | 2,800,000.00 | 11,300,000.00 | 11,072,157.51 | 97.98 |
| 1002 | மேலதிக, விடுமறை தின சம்பளம் | 3,500,000.00 | | | 3,500,000.00 | 3,197,060.00 | 91.34 |
| 1003 | பிற படிகள் | 8,200,000.00 | 175,000.00 | 1,500,000.00 | 9,875,000.00 | 9,815,876.57 | 99.40 |
| | **பிரயாணச்செலவு** | | | | | | |
| 1101 | உள்நாடு | 1,000,000.00 | 600,000.00 | | 1,600,000.00 | 1,481,292.00 | 92.58 |
| 1102 | வெளிநாடு | 1,000,000.00 | (200,000.00) | | 800,000.00 | 201,507.00 | 25.19 |
| | | | | | | | |
| | **வழங்கல்** | | | | | | |
| 1201 | எழுதுகருவி வகைகளும் அலுவலக தேவைகளும் | 1,500,000.00 | | | 1,500,000.00 | 1,425,358.52 | 95.02 |
| 1202 | எரிபொருள் | 8,000,000.00 | | | 8,000,000.00 | 7,641,971.26 | 95.52 |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **பராமரிப்புச் செலவு** | | | | | | |
| 1301 | வாகனம் | 3,000,000.00 | 400,000.00 | | 3,400,000.00 | 3,396,266.26 | 99.89 |
| 1302 | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 100,000.00 | | | 100,000.00 | 64,795.58 | 64.80 |
| 1303 | கட்ட்டங்களும் நிருமாணிப்புகளும் | 100,000.00 | (93,000.00) | | 7,000.00 | 6,008.70 | 85.84 |
| | | | | | | | |
| | **சேவைகள்** | | | | | | |
| 1401 | போக்குவரத்து | 800,000.00 | (200,000.00) | | 600,000.00 | 415,347.00 | 69.22 |
| 1402 | அஞ்சல், தொலைத்தொடர்பு | 2,600,000.00 | (882,000.00) | | 1,718,000.00 | 1,358,933.09 | 79.10 |
| 1403 | மின்சாரம், நீர் | 1,200,000.00 | (300,000.00) | | 900,000.00 | 845,823.17 | 93.98 |
| 1404 | வாடகை, குத்தகை | 600,000.00 | | | 600,000.00 | 75,850.00 | 12.64 |
| 1405 | பிற | 1,000,000.00 | | | 1,000,000.00 | 985,574.14 | 98.56 |
| | | | | | | | |
| | **மாற்றுகைகள்** | | | | | | |
| 1502 | ஓய்வூதிய நலன்கள் | 200,000.00 | | 182,000.00 | 382,000.00 | 381,278.88 | 99.81 |
| | | | | | | | |
| | **மூலதனச் செலவினம்** | | | | | | |
| | **புணரமைப்பும் விருத்தியும்** | | | | | | |
| 2001 | கட்ட்டங்களும் நிருமாணிப்புகளும் | 300,000.00 | | | 300,000.00 | 53,998.53 | 18.00 |
| 2002 | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 3,000,000.00 | 500,000.00 | | 3,500,000.00 | 3,474,386.25 | 99.27 |
| | | | | | | | |
| 2003 | வாகனம் | | | 86,000,000.00 | 86,000,000.00 | 78,626,091.91 | 91.43 |
| | **மூலதனச் சொத்துக்ளை சுவீகரித்தல்** | | | | | | |
| 2101 | வாகனம் | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,000,000.00 | | | 1,000,000.00 | 733,116.06 | 73.31 |
| 2103 | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 1,000,000.00 | | | 1,000,000.00 | 824,438.00 | 82.44 |
| | மொத்தம் | **46,600,000.00** | | **90,482,000.00** | **137,082,000.00** | **126,077,130.43** | **91.97** |

**(அட்டவணை 4:** ***செலவு அறிக்கை - நிறுவன மற்றும் நிருவாக சேவைகள்)***

| நிகழ்வு 1 – செயற்பாடுகள் நடவடிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்டம் 2 - நிறுவன மற்றும் நிருவாக சேவைகள்** | | | | | | | |
| விடய இல | வகுதி / விடயம் | மதிப்பீடு 2016 (ரூபா) | நி.நி 66 | குறைநிரப்பு மதிப்பீடு 2016(ரூபா) | திருத்தப்பட்ட மதிப்பீடு 2016 (ரூபா) | திரண்டசெலவு (ரூபா) | செலவு நூற்று வீதம் (%) |
| | **மீண்டுவரும்செலவினம்** | | | | | | |
| | **தனிப்பட்ட வேதனாதிகள்** | | | | | | |
| 1001 | சம்பளம், பிற | 24,000,000.00 | 1,100,000.00 | 7,000,000.00 | 32,100,000.00 | 32,037,936.28 | 99.81 |
| 1002 | மேலதிக, விடுமறை தின சம்பளம் | 1,500,000.00 | 400,000.00 | | 1,900,000.00 | 1,754,747.23 | 92.36 |
| 1003 | பிற படிகள் | 29,500,000.00 | 4,600,000.00 | 659,000.00 | 34,759,000.00 | 33,885,723.99 | 97.49 |
| | **பிரயாணச்செலவு** | | | | | | |
| 1101 | உள்நாடு | 600,000.00 | (100,000.00) | | 500,000.00 | 414,107.00 | 82.82 |
| 1102 | வெளிநாடு | 2,000,000.00 | (600,000.00) | | 1,400,000.00 | 1,347,223.83 | 96.23 |
| | | | | | | | |
| 1201 | **வழங்கல்** | 3,000,000.00 | 1,600,000.00 | | 4,600,000.00 | 4,554,711.90 | 99.02 |
| 1202 | எமுதுகருவி வகைகளும் அலுவலக தேவைகளும் | 4,500,000.00 | 300,000.00 | | 4,800,000.00 | 4,586,796.18 | 95.56 |
| 1203 | உணவு, சீருடை | 200,000.00 | (70,000.00) | | 130,000.00 | 128,347.84 | 98.73 |
| 1205 | பிற | 200,000.00 | (100,000.00) | | 100,000.00 | 68,906 | 68.91 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **பராமரிப்புச் செலவு** | | | | | | |
| 1301 | வாகனம் | 4,800,000.00 | (300,000.00) | | 4,500,000.00 | 4,286,454.00 | 95.25 |
| 1302 | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 300,000.00 | (130,000.00) | | 170,000.00 | 157,924.87 | 92.90 |
| 1303 | கட்ட்டங்களும் நிருமாணிப்புகள ும் | 100,000.00 | (100,000.00) | | 0.00 | - | - |
| | **சேவைகள்** | | | | | | |
| 1401 | போக்குவரத்து | 2,200,000.00 | 200,000.00 | 2,859,000.00 | 5,259,000.00 | 5,214,943.51 | 99.16 |
| 1402 | அஞ்சல், தொலைத்தொடர்பு | 2,100,000.00 | (100,000.00) | | 2,000,000.00 | 1,938,849.00 | 96.94 |
| 1403 | மின்சாரம், நீர் | 8,000,000.00 | (300,000.00 | | 7,700,000.00 | 7,640,782.90 | 99.23 |
| 1404 | வாடகை, குத்தகை | 23,000,000.00 | (2,500,000.00) | | 20,500,000.00 | 20,464,570.09 | 99.83 |
| 1405 | பிற | 5,000,000.00 | (400,000.00) | | 4,600,000.00 | 4,546,820.43 | 98.84 |
| | **மாற்றுகைகள்** | | | | | | |
| 1503 | அரசாங்க நிறுவனங்கள் | | | 25,000,000.00 | 25,000,000.00 | 11,632,480.93 | 46.53 |
| 1505 | பங்களிப்பும் பங்களிப்புத் தொகையும் | 4,300,000.00 | (3,000,000.00) | | 1,300,000.00 | 1,289,193.71 | 99.17 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்துக்கடன்களுக்கான வட்டி | 1,200,000.00 | (500,000.00) | | 700,000.00 | 688,326.17 | 98.33 |
| 1508 | பிற | 100,000.00 | | | 100,000.00 | 52,909.07 | 52.91 |
| | **மூலதனச் செலவினம்** | | | | | | |
| | **புணரமைப்பும் விருத்தியும்** | | | | | | |
| 2001 | கட்ட்டங்களும் நிருமாணிப்புகள ும் | 1,000,000.00 | | | 1,000,000.00 | 514,585.50 | 51.46 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **2002** | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 400,000.00 | | | 400,000.00 | 10,925.00 | 2.73 |
| **2003** | | 1,800,000.00 | | | 1,800,000.00 | 1,787,330.32 | 99.30 |
| | வாகனம் | | | | | | |
| **2101** | **மூலதனச் சொத்துக்ளை சுவீகரித்தல்** | | 411,000.00 | | 411,000.00 | 410,200.00 | 99.81 |
| **2102** | வாகனம் | 2,000,000.00 | | | 2,000,000.00 | 1,804,036.45 | 90.20 |
| **2103** | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,200,000.00 | | | 1,200,000.00 | 1,158,555.00 | 96.55 |
| | **திறன் அபிவிருத்தி** | | | | | | |
| **2401** | பயிற்சியும் திறன் அபிவிருத்தியும் | 2,000,000.00 | (411,000.00) | | 1,589,000.00 | 1,079,233.40 | 67.92 |
| | **மொத்தம்** | **125,000,000.00** | | **35,518,000.00** | **160,518,000.00** | **143,456,621.43** | **89.37** |

## 1.5.3 திட்டமிடல், அபிவிருத்தி கிளை

### 1.5.3.1 பதவியணி விபரம்

(அட்டவணை 5: *பதவியணி விபரம் - திட்டமிடல், அபிவிருத்தி கிளை*)

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| **மேலதிகசெயலாளர் (திட்டமிடல், அபிவிருத்தி)** | 1 | 1 | - |
| **பணிப்பாளர் (திட்டமிடல்)** | 1 | - | 1 |
| **பணிப்பாளர் (அபிவிருத்தி)** | 1 | 1 | - |
| **உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)** | 1 | 1 | - |
| **உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)** | 2 | 1 | 1 |
| **அபிவிருத்தி உத்தயோகத்தர்** | 6 | 3 | 3 |
| **அலுவலக பணியாளர்** | 3 | 2 | 1 |

### 1.5.3.2. பிரதான பணிகள்

- 2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகளை மும்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சரின் அலுவலகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவசெலவு திட்ட திணைக்களம் உட்பட ஏனைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- 2016 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு சார்பில் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட குழுநிலை தொடர்பாக தயாரிக்கப்படும் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- மாண்புமிகு அமைச்சரின் பங்குபற்றுதலுடன் மாதாந்த மற்றும் விசேட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை ஒழுங்கு செய்து நடாத்துதல்.
- மாதாந்த/ காலாண்டு / வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல், முன்னேற்ற மீளாய்வு உட்பட உரிய நிறுவனங்னளுக்கு சமர்ப்பித்தல்.

## 1.5.4 கணக்காய்வுக் கிளை

### 1.5.4.1. பதவியணி விபரம்

(அட்டவணை 6 ; *பதவியணி விபரம் - கணக்காய்வுக் கிளை*)

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| **பிரதான உள்ளக கணக்காய்வாளர்** | 1 | 1 | - |
| **அபிவிருத்தி உத்தயோகத்தர்** | 1 | 1 | - |
| **முகாமைத்துவ உதவியாளர்** | 1 | - | 1 |
| **அலுவலக பணியாளர்** | 1 | 1 | - |

### 1.5.4.2. பிரதான பணிகள்

- அமைச்சினதும் அமைச்சர் அலுவலகத்தினதும் நிதி முகாமைத்துவ த்தை நுண்ணாய்வு செய்தலும் கணக்காய்வு விசாரணைகளை சமர்ப்பித்தலும்.

- வணிகக் கப்பல் செயலகத்தின் நிதி முகாமைத்துவத்தை நுண்ணாய்வு செய்தலும் கணக்காய்வு விசாரணைகளை சமர்ப்பித்தலும்.


- இலங்கை துறைமுக அதிகார சபையினதும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினதும் நிதி நிருவாகத்தினை ஒருங்கிணைத்தலும் கணக்காய்வு விசாரணைகளை சமர்ப்பித்தலும்.

- பகிரங்க தொழில் முயற்சிகள் பற்றிய பாராளுமன்ற குழுவிற்குரிய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

- பெறுகை முகாமைத்துவ பணிகளை நுண்ணாய்வு செய்தல்.

# பகுதி II

## அமைச்சின் விடய நோக்கெல்லையின் கீழ்வரும் நிறுவனங்கள்



# 02. வணிகக் கப்பல் செயலகம்

## நோக்கு

“கடல்சார் மு தன்மைநிலை ஊடாக உலகளாவிய கப்பற்றொழில் துறையில் அங்கீகரிப்பினைப் பெறல்".

## பணி

- தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக தரம்மிக்க கடலோடித் தொழிற்றுறை வல்லுநர்களை உருவாக்கல்.
- தரமும் போட்டித் தன்மையும் மிக்க கப்பற் பதிவேடொன்றினைப் பேணிவருதல்.
- ஏற்புடைத்தான அனைத்துவிதமான தேசிய மற்றும் சர்வதேச உடன்பாடுகளையும் பிரமாணங்களையும் அமுலாக்கல்.
- பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்தி இற்றைப்படுத்தல்.
- உயர்மட்ட வினைத்திறனுடனும் கூறுபடா நிலையுடனும் சேவை நாட்டமுடைய

## 2.1 குறிக்கோள்கள்

- தூய்மையான கடற்பரப்பின் மீது பாதுகாப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கப்பல்கள் பயணஞ் செய்வதை உறுதிப்படுத்தல்.
- கடற்பரப்பில் உயிர்களினதும் உடைமைகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- கடலோடிகளுக்கு வெளிநாட்டு மற்றும் தேசிய கப்பல்களில் தொழில்களைப் பெறக்கூடிய வகையில் அவர்களுக்கு தரம்மிக்க கடல்சார் கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கை கடலோடிகளை சர்வதேச கடல்சார் தொழிற்றுறையில் மேம்படுத்தல்.
- இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்கள் பதிவு செய்யப்படுவதை ஊக்குவித்தல், ஆய்வு செய்தல் மற்றும் பரிசோதித்தல் மூலமாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தரங்களைப் பேணிவருதல்.
- இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் துறைமுகங்கள் ஐமுஆனுரு அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் இணங்கியொழுகுதல்அத்துறைமுகங்களை . பரிசோதனை செய்தல் மூலமாக இலங்கையின் துறைமுகங்களுக்கு தரங்குறைந்த கப்பல்கள் வருவதைத◌் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஏற்புடைய தேசிய மற்றும் சர்வதேச உடன்பாடுகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் அமைந்தொழுகுதலை அமுலாக்கல்.
- சித்தாந்தங்களுக்கும் உள்நாட்டுப் பங்காளிகளுக்கும் சட்டப்படியும் நியாயமாகவும் பரஸ்பர ரீதியாகவும் நன்மை பயக்கக்கூடிய கப்பற்றுறை முகவராண்மை தொழில்முயற்சி ஒழுங்குறுத்தல்களை அமுலாக்கல்.

## 2.2 செயலாற்றுகை


### 2.2.1 கப்பற் சிப்பந்திகள்

#### 2.2.1.1 உடன்படிக்கை செய்யப்பட்ட கப்பற் சிப்பந்திகள் (சேவையில் ஈடுபடுத்தல்)

தற்போதைய ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, சகல கப்பற் சிப்பந்திகளும், அவர்கள் கப்பலுக்குப் பணியாற்றுவதற்குச் செல்வதற்கு முன்னர் வணிகக் கப்பல் செயலகத்தில் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

(அட்டவணை 7: உடன்படிக்கை செய்யப்பட்ட கப்பற் சிப்பந்திகளின் எண்ணிக்கை)

| மாதம் | கப்பற் சிப்பந்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 589 |
| பெப்ரவரி | 560 |
| மார்ச் | 700 |
| ஏப்ரல் | 607 |
| மே | 618 |
| ஜுன் | 636 |
| ஜுலை | 653 |
| ஆகஸ்ட் | 587 |
| செப்டம்பர் | 578 |
| ஒக்டோபர் | 614 |
| நொவம்பர் | 739 |
| டிசம்பர் | 794 |
| மொத்தம் | **7675** |





**மூலம்**:வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

#### 2.2.1.2 கப்பல்களில் பணிகளிலிருந்து விலகிய கப்பல் சிப்பந்திகளின் எண்ணிக்கை.

(அட்டவணை 8: உடன்படிக்கை செய்யப்பட்ட கப்பற் சிப்பந்திகளின் எண்ணிக்கை)

| மாதம் | கப்பற் சிப்பந்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 535 |
| பெப்ரவரி | 550 |
| மார்ச் | 515 |
| ஏப்ரல் | 505 |
| மே | 596 |
| ஜுன் | 395 |
| ஜுலை | 491 |
| ஆகஸ்ட் | 558 |
| செப்டம்பர் | 577 |
| ஒக்டோபர் | 640 |
| நொவம்பர் | 629 |
| டிசம்பர் | 652 |
| மொத்தம் | **6643** |





**மூலம்**: வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

### 2.2.2 சான்றிதழ்கள் வழங்கல்

2.2.2.1. வழங்கிய தொடர்தேர்ச்சியான விடுவிப்புச் சான்றிதழ்களின் (ஊனுஊ) எண்ணிக்கை

(அட்டவணை 9: தொடர்ந்தேர்ச்சியான விடுவிப்புச் சான்றிதழ்களின் எண்ணிக்கை)

| மாதம் | தொடர்ந்தேர்ச்சியான விடுவிப்புச் சான்றிதழ்களின் எண்ணிக்கை (ஊனுஊ) |
|---|---|
| ஜனவரி | 86 |
| பெப்ரவரி | 88 |
| மார்ச் | 91 |
| ஏப்ரல் | 81 |
| மே | 106 |
| ஜுன் | 148 |
| ஜுலை | 114 |
| ஆகஸ்ட் | 148 |
| செப்டம்பர் | 104 |
| ஒக்டோபர் | 102 |
| நொவம்பர் | 158 |
| டிசம்பர் | 102 |
| மொத்தம் | **1328** |





**மூலம்**: வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

2.2.2.2 **சான்றிதழ்கள் (தகைமைச் சான்றிதழ் / காவல் காத்தல் சான்றிதழ்கள்) கப்பல் செலுத்துதல் பிரிவு**

(அட்டவணை 10: வழங்கப்பட்ட சான்றிதழ் களின் எண்ணிக்கை- கப்பல் செலுத்துதல் பிரிவு)

| சான்றிதழ்களின் வகைகள் | வழங்கப்பட்ட சான்றிதழ் களின் எண்ணிக்கை |
|---|---|
| கப்பற் பிரதானி- (வகுப்பு 1) | 25 |
| உயர்நிலை அலுவலர்- (வகுப்பு 2) | 34 |
| கப்பல் செலுத்துதல் காவல் காத்தல் பொறுப்பு அலுவலர் | 69 |
| காவல் காத்தல் - பணியாட்கள் | 1277 |




மூலம்: வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

**பொறியியல் பிரிவு**

(அட்டவணை 11: வழங்கப்பட்ட சான்றிதழ் களின் எண்ணிக்கை- பொறியியல)

| பரீட்சைகளின் வகைகள் | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| பிரதான பொறியியலாளர் | 16 |
| 2 ஆவது பொறியியலாளர் | 22 |
| பொறியியல் காவல் காத்தல் பொறுப்பு அலுவலர் | 84 |
| காவல் காத்தல் பொறி- பணியாட்கள் | 758 |


மூலம்: வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.




2.2.2.3 **2016 ஆம் ஆண்டுக்கான கப்பல் முகவர்கள் (வருடாந்த மற்றும் நிமித்தமுறை கப்பல் வருகை), கொள்கலன் நிலைய இயக்குநர்கள் மற்றும் கப்பற்சரக்கு கொண்டு செல்வோர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்.**

(அட்டவணை 12: வழங்கப்பட்ட அனுமதிப் பதிரங்களின் எண்ணிக்கை)

| அனுமதிப் பத்திரங்களின் வகை | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கப்பல் முகவர்கள் | 187 |
| கொள்கலன் நிலைய இயக்குநர்கள் | 24 |
| கப்பற்சரக்கு கொண்டு செல்வோர் | 372 |
| உரிமம் பெறாத கப்பல் பிரதானிகளின் கப்பல் வருகைக்கான அனுமதிப் பத்திரங்கள் | 716 |
| புதிதாக பிரதானிகளைச் சேர்ப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் | 54 |




**மூலம்:** வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

**2.2.2.4 கொள்களன் நிறை உறுதிப்படுத்தல் சான்றிதழ் வழங்கல் - 2016**

(அட்டவணை 13: வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை)

| உரிமத்தின் வகை | வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிறுத்தல் பாலம் (Weigh Bridge) | 49 |
| ஏற்றுமதியாளர் (Shipper) | 270 |
| ப்ரைம் மூவர் (Prime Mover) | 498 |
| ட்ரய்லர் (Trailer) | 594 |
| பார ஊர்தி (Lorrry) | 272 |
| | |





மூலம்:வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

## 2.3 வணிகக் கப்பல் செயலகத்தின் மாதாந்த வருமானம் பின்வருமாறு

(அட்டவணை 14: வணிகக் கப்பல் செயலகத்தின் மாதாந்த வருமானம் பின்வருமாறு)

| மாதம் | வருமானம் (ரூபாய்) |
|---|---|
| ஜனவரி | 6,144,176.61 |
| பெப்ரவரி | 3,212,816.00 |
| மார்ச் | 4,547,520.49 |
| ஏப்ரல் | 6,347,426.80 |
| மே | 4,757,947.07 |
| ஜுன் | 9,982,057.40 |
| ஜுலை | 8,786,824.40 |
| ஆகஸ்ட் | 7,318,032.00 |
| செப்டம்பர் | 4,945,678.00 |
| ஒக்டோபர் | 6,417,759.00 |
| நொவம்பர் | 13,115,466.02 |
| டிசம்பர் | 10,521,071.60 |
| மொத்தம் | **86,096,775.39** |




ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் வருமானம் குறிப்பிட்டளவு அதிகரித்திருப்பதற்கான காரணம் கொள்கலன் நிறையை உறுதி செய்தல் சான்றிதழ் வழங்களின் கீழ் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்கலன் ஊர்திகள் இயக்குனர்கள் போன்றோரைப் பதிவு செய்வதற்கான புதிய ஒழுங்குவிதி அறிமுகம் செய்யப்பட்டதாகும் என்பதோடு நொவெம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வருமானத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கான காரணம் கப்பல் முகவர் உரிமங்கள் மற்றும் கப்பற் சரக்கு கொண்டு செல்வோர்கள் உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டமையாகும்.

மூலம்: வணிகக் கப்பல் செயலக உள்ளகப் புள்ளிவிபரப் பிரிவு.

## 2.4 அடைவுகள்

### 2.4.1.1 மனித வள அபிவிருத்தி

(அட்டவணை 15: ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகள)

| | அலுவலரின் பெயர் | பதவி | பயிற்சி நிகழ்ச்சி | திகதி.: காலம் |
|---|---|---|---|---|
| 01 | வணிகக் கப்பல் செயலகத்தின் கப்பற் துறைசார் வல்லுனர்கள் | | கப்பல் விபத்து விசாரணை | 12 நாட்கள் |
| 02 | திருமதி ஐ.பீ.பீ. ஜயதிலக்க | அபிவிருத்தி அலுவலர் | கருத்திட்ட முகாமை | 02 நாட்கள் |
| 03 | திரு னு.யு.பு.ளு. குமார | கணக்காளர் | பொருட்கள் பெறுகை | 05 நாட்கள் |
| 04 | சர்வதேச தரநியம அமைப்பு (ISO) செயற்பாடுகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் | | உள்ளகக் கணக்காய்வு | 02 நாட்கள் |
| 05 | சகல ஊழியர்கள் | | அலுவலக முறைமைகள் | 01 நாள் |
| 06 | திரு னு.யு.பு.ளு. குமார | கணக்காளர் | திறன் விருத்தி | 05 நாட்கள் |
| 07 | திருமதி ஐ.பீ.பீ. ஜயதிலக்க | அபிவிருத்தி அலுவலர் | கணக்கீட்டு வகிபாகம் | 1 நாள் |
| 08 | திருமதி ேனு.ே. தில்ருக்ஷி | அபிவிருத்தி அலுவலர் | ஆலோசனை வழங்கல் திறன்கள் | 02 நாட்கள் |
| | | | அலுவலக முறைமை | 03 நாட்கள் |
| 09 | திருமதி வு.று. வக ஆரச்சி | முகாமை உதவியாளர் | பசுமை செயற்திறன் | 01 நாள் |
| | | | அறிக்கை எழுதுதல் | 03 நாட்கள் |
| 10 | திரு ஆ்.. சுதர்ஷன | சாரதி | சாரதி திறன்கள் | 02 நாட்கள் |
| 11 | திரு து.ஆ. சுனில் | பரீட்சகர் | பொருட்கள் பெறுகை செயன்முறை மற்றும் நடைமுறை | 03 நாட்கள் |
| 12 | திரு. ர்.பு.மு.ளு. சுமனசேகர | அபிவிருத்தி அலுவலர் | பொருட்கள் பெறுகை | 02 நாட்கள் |
| 13 | திருமதி ே.யு.ளு.யு. மல்காந்தி | முகாமை உதவியாளர் 1 | பசுமை செயற்திறன் | 01 நாள் |
| | | | CIGAS | 03 நாட்கள் |
| 14 | திருமதி ஹர்ஷனி விஜேசுந்தர | முகாமை உதவியாளர் | ஊழியர் கோவைகள் | 01 நாள் |
| 15 | செல்வி ளு.டு. ஜீவந்தர | முகாமை உதவியாளர் | நிகழ்ச்சி முகாமை | 03 நாட்கள் |

### 2.4.2.2 வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்

| | அலுவலரின் பெயர் | பதவி | பயிற்சி நிகழ்ச்சி | திகதி.: காலம் |
|---|---|---|---|---|
| 01 | திரு யு.று. செனவிரத்ன | பணிப்பாளர் தலைமை அதிபதி | காலநிலை மாற்றங்கள் ஆசியப் பிராந்திய மன்றம் - மலேசியா | 02 நாட்கள் |
| 02 | திரு. ீ.ஏ.வு்.. சந்தன | அரச கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) | கப்பல்களின் மூலம் மாசடைதலைத் தடுப்பதற்கான சர்வதேச மாநாடு | 05 நாட்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (MARPOL) – தாய்லாந்து | |
| 03 | கெப்டன் ஆ.ரு.ஜ. பீரிஸ் | அரச கப்பல் அளவையியலாளர் (கப்பல் செலுத்துதல்) | கப்பல்களின் மூலம் மாசடைதலைத் தடுப்பதற்கான சர்வதேச மாநாடு (ஆயுசீழுடு) – தாய்லாந்து | 05 நாட்கள் |
| 04 | கெப்டன் பு.யு.மு. வில்சன் | துறைமுக அரச கட்டுப்பட்டாளர் | துறைமுக அரச கட்டுப்பாடு துறைசார் பயிற்சி செயற்பணி | 14 நாட்கள் |
| 05 | கெப்டன் ர்.ஆ.ளு. ஹேரத் | துறைமுக அரச கட்டுப்பட்டாளர் | | |
| 06 | கெப்டன் ளு.ஆ.ளு. பண்டார | பரீட்சகர் | செயலாளர் மட்ட கூட்டம் | 03 நாட்கள் |
| | | | துறைமுக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு | 05 நாட்கள் |

2.4.2 **சர்வதேச கடற்துறை அமைப்பு (IMO) கட்டாய கணக்காய்வு**

அங்கத்துவ நாடுகள் சர்வதேச உடன்படிக்கைகளை உரிய முறையில் செயற்படுத்துவதை உறுதி செய்வதற்கு, சர்வதேச கடற்றுறை அமைப்பின் கட்டாய கணக்காய்வு நிகழ்ச்சியை மூன்று அங்கத்தவர் கணக்காய்வு குழு வெற்றிகரமாக வணிகக் கப்பல் செயலகத்திலும் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களிலும் 2016 ஜூலை 11 முதல் 18 வரை நடாத்தப்பட்டது.

2.4.3 **யாழ்ப்பான கிளை அலுவலகம்**

2016.06.21 ஆம் திகதியுடைய 16.'.1043.'.737.'.026 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு ஏற்ப, பொருட்கள் மற்றும் பயனிகள் போக்குவரத்து மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக யாழ்ப்பானக் குடா நாட்டிலும் மற்றும் அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் இறங்கு துறை வசதிகளை விருத்தி செய்வதற்காக, 2016 செப்டெம்பர் 02 ஆம் திகதி வணிகக் கப்பல் செயலகம் அதன் யாழ்ப்பானக் கிளையை ஆரம்பிக்கின்ற செயற்பாடுகளை தொடங்கி வைத்தது என்பதோடு வணிகக் கப்பல் செயலகம் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு வருகின்றது.

1. பொருத்தமான காணியைப் பெற்றுக் கொள்ளல்
2. பொருத்தமான அலுவலர்களை சேர்த்துக் கொள்தல்
3. முன்மொழியப்பட்ட கட்டடத்தைத் திட்டமிடுதல்
4. முன்மொழியப்பட்ட இறங்கு துறையை திட்டமிடுதலும் மற்றும் ஆய்வு செய்தலும்
5. அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

2.4.4 **ஏனையவை**

- உலக சமுத்திர தின நிகழ்ச்சியை 450 மேற்கு மற்றும் தென்மாகாண பாடசாலை மாணவர்களுக்கு மகபொல பயிற்சி நிலையத்தில் 2016 பெப்ரவரி 24 ஆம் திகதி மற்றும் டிசம்பர் 22 ஆகிய தினங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- கப்பற் சிப்பந்திகளுக்காக வழங்கப்படுகின்ற தொடர்ந்தேர்ச்சியான விடுவிப்புச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் (ஊனுஊ ரூ ஊழஊ) என்பவற்றுக்கான முதல் கட்டம் பூர்த்தியடைந்துள்ளது என்பதோடு அத்தகைய சான்றிதழ்கள் வழங்குதல் தற்போது நடைபெற்று வருகின்றது.

- சுவிட்ஸர்லாந்து நாட்டு கொடியுடைய கப்பல்களில் வேலை செய்வதற்கு இலங்கை கப்பற் சிப்பந்திகளுக்கு வசதியளிப்பதற்கு சுவிட்சர்லாந்து அரசுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை 2016 ஜூலை 25 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- 2016 செப்டெம்பர் 20 ஆம் திகதி கணக்காய்வை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வணிகக் கப்பல் செயலகத்தின் சகல பிரிவுகளுக்குமான ஐளுழு 9001:2008 தர முகாமைச் சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டது.

- “கொள்களன் நிறை உறுதிப்படுத்தல்” தொடர்பான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டு 2016.08.11 ஆம் திகதியிடப்பட்ட 1979/30 ஆம் இலக்க வர்ததமானியில் அது வெளியிடப்பட்டது

## 2.5 எதிர்காலத்துக்கான திட்டங்கள்

### 2.5.1 குறுங்காலம்

I. தொடர்ந்தேர்ச்சியான விடுவிப்புச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் (ஊனுஊ ரூ ஊழஊ) என்பவற்றுக்கான இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

II. பொருட்கள் மற்றும் பயனிகள் போக்குவரத்து மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக யாழ்ப்பானக் குடா நாட்டிலும் மற்றும் அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் இறங்கு துறை வசதிகளை விருத்தி செய்வதற்காக, வணிகக்கப்பல் செயலகத்துக்கான பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
1 பொருத்தமான அலுவலர்களை சேர்த்துக் கொள்ளல்
2 அலுவலகக் கட்டடத்தை நிரமானிப்பதற்கு வசயளித்தல்
3 இறங்கு துறை நிர்மாணித்தல்

III. வணிகக் கப்பல் செயலகத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்ககளை திருத்துதல்.

IV. சர்வதேச கடற்றுறை அமைப்பினால் (IMO) வேண்டப்படுகின்ற உடன்படிக்கைகளை/ குறியீடுகளை உறுதிப்படுத்தல்

V. சர்வதேச கடற்றுறை அமைப்பினால் IMO உடன்படிக்கைகளுக்காக உள்நாட்டு சட்ட திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்தல்.

VI. இலங்கை கப்பற் சிப்பந்திகள் ஏனைய நாடுகளின் கப்பல்களில் பணியாற்றுவதற்கு சான்றிதழ்களை அங்கீகரிப்பதற்கு ஏனைய நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைளைக் கைச்சாத்திடுதல்.

VII. சர்வதேச கடற்றுறை அமைப்பின் (IMO) உதவியுடன் ஒரு ஆளுமையைக் கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தல்.

### 2.5.2 நீண்ட காலம்

I. பொது மக்களுக்கு சிறப்பான சேவையொன்றை வழங்குவதற்கும் மற்றும் வெளிப்படையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் வணிகக் கப்பல் செயலகத்துக்கான தரநியம உறுதி முறைமையை அமுல்படுத்தல்.

II. கப்பல் தொழிற்துறையில் சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப சட்டவாக்கங்களை திருத்துதலும், அறிமுகப்படுத்தலும்.

III. கரையோரக் கப்பல் துறைக்கான கரையோர ஒழுங்கு விதியைத் தயாரித்தல்.

# 03. இலங்கை துறைமுக அதிகாரசபை

## நோக்கு

“பட்டுப்பாதையின் கடல்சார் துறையில் சிறந்த சேவை வழங்குநரொருவராகுதல்”

## பணிக்கூற்று

“திடமான சுற்றாடலினுள் சர்வதேச நிலையிலான சேவைகளை வழங்குதல்”

## 3.1 அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

- கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- கடல்சார் சிறப்பு மத்திய நிலையமெனும் கொழும்புத் துறைமுகத்தின் நிலைபாட்டினை உறுதிப்படுத்துதல்.
- குறித்த பிரிவுசார்ந்த விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்
- மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள், கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல்
- கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுதல்
- முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் பிரபல்யம் பெறுதல்
- திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிருவாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்
- உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துதல்
- காபன் பரிமாணம் குறைக்கப்படுதல்
- கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்
- வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்
- எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடுகள்
- கப்பலோட்டம் நோக்கமாகக் கொண்ட செயற்றிறன் மிகு சேவைகள்
- கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள்

## 3.2 செயற்திட்டம்

### 3.2.1 கிழக்கு கொள்கலன் முனையம் (நுஊவு) – கட்டம் 1 - கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம்

கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டத்தின் பிரதான திட்டத்தில் 3 கொள்கலன் நங்கூரத்தளங்களைக் கொண்ட 1200 மீட்டர் நீளமான துறைமேடையினை கிழக்கு கொள்கலன் முனையம் கொண்டிருக்கும். கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் கையாளல் பரிமாணத்திலுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி திட்டத்தின் முதலாவது கட்டமாக தனி நங்கூரத்தளமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முன்மொழியப்பட்டுள்ளது.

தெற்கு துறைமுகத்தின் இரண்டாவது ஆழத்தில் கூடிய கொள்கலன் முனையமாக கிழக்கு கொள்கலன் முனையம் இருப்பதோடு வருடாந்தம் 2.4 மில்லியன் இருபது சம அலகுகளைக் கொண்ட பரிமாணம் மற்றும் 1200 மீட்டர் கொண்ட மேடைச் சுவரையும் 18 மீட்டர் ஆழத்தையும் இது கொண்டிருக்கும். கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து கையாளல் மேற்கொள்வதற்கு நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு ஒப்படைக்கப்படும் (BOT) சலுகையை வழங்குவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபை தற்போது மேடைச் சுவருக்கு 440 மீட்டர் அப்பாலுள்ள முனையப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்து கிழக்கு கொள்கலன் முனையத்தின் ஏனைய சம்பந்தப்பட்ட வசதிகளையும் வழங்கியுள்ளது. செய்திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கொடுக்கல் வாங்கல்களின் ஆலோசகராக ஆசிய அபிவிருத்தி வங்கி நியமிக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

2016 யூன் 06 ஆம் திகதி அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான விளம்பரம் (Expression of Interest) வெளிப்படுத்தப்படுதலோடு செய்திட்டத்தின் பூர்வங்க தகுதிகாண் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2016 செப்டெம்பர் 20 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு அபிப்பிராயம் தெரிவிக்கும் விண்ணப்பங்களின் மதிப்பீடுகள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் மற்றும் பெறுகைக்கான குழுவினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தயாரிக்கப்பட்ட சலுகைக்கான உடன்படிக்கையின் நகல் அறிக்கை இலங்கை அதிகாரசபையினால் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்கான கருத்தாடல் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 3.2.2. மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்

#### 3.2.2.1 மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் கட்டம் - II

2016 டிசெம்பர் 31 வரை குறித்த கட்டத்தின் கட்டுமானப்பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு (அட்டவணை 16: மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் கட்டம் - II)

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் 2016 டிசெம்பர் 31 வரை |
|---|---|
| **நீர்த் தடுப்புக் கூடம் (தென்கிழக்கு)** | 100% |
| **நீர்த் தடுப்புக் கூடம் (தெற்கு)** | 100% |
| **புதிதாகத் தோண்டுதல் (மேற்றள மண் அகழ்தல்)** | 100% |

| | |
|---|---|
| தடாகம் தோண்டுதல் (கடினமான தோண்டுதல்) | 100% |
| மேடைச் சுவர் நிர்மாணித்தல் (கேசன்) | 100% |
| புதிய எண்ணெய் முனையம் நிர்மாணித்தல் | 100% |
| துறைமுக தடாகம் ஆழமாக்குதல் | 100% |
| பாதைகள் மற்றும் முனையங்கள் நிர்மாணித்தல் | 98% |
| செயற்கை தீவு அமைக்கும் பணிகள் | 100% |
| உட்புகு கால்வாய் ஆழமாக்குதல் | 100% |
| துறைமுக இயக்க உபகரணங்களுக்கான கொள்வனவுக் கட்டளை வழங்குதல் (இழுவைக் கலங்கள் / எண்ணெய் வழங்கும் வத்தைகள் நங்கூரமிடலின் கலன்கள்) | 50% |
| துறைமுக இயக்க உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் (இழுவைக் கலங்கள் / எண்ணெய் வழங்கும் வத்தைகள் / நங்கூரமிடலின் கலன்கள்) | 12% |
| பொது சேவை முனையம் | 98% |

- எரிபொருள்களின் விலை குறைதல் மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் குறைவடைதல்கள் காரணமாக குறிப்பாக விலைகளின் சீர் செய்தல்களிலான குறைவடைதல்களோடு மதிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த நிதித் தொகையில் சுமார் 80 – 100 அமெரிக்க டொலர் மில்லியனுக்கிடையிலான குறைவடைவு ஏற்படுமென தற்போது அறியப்பட்டுள்ளது. 2016.10.26 ஆம் திகதி நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அலுவலர்களின் குழுவில் இது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட தரப்பு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கிடையிலான இணைந்த வர்த்தகமொன்றாக ஒட்டுமொத்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் குறிப்புகளுக்கமைய பின்வரும் விடயங்கள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டன.

விலைதாரரின் கடனை இயங்காதிருக்கச் செய்யுமாறு வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அறிவித்தல்

I இரண்டாவது கடன் தொகையில் மீதியாக இருக்கும் தொகை பயன்படுத்தப்படாது இரத்துச் செய்யப்படுவதற்கு குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

II கட்டம் 11 இன் கீழ் நடைபெற்றுவரும் பணிகளுக்கு அரசாங்க சலுகைக் கடன் தேவைப்படுவதுடன் செய்திட்டம்/ கொடுப்பனவுகள் முடிவடைந்ததன் பின்னர் குறித்த கடன் தொகையில் ஒரு பகுதி மாத்திரம் மீள வழங்கப்பட முடியுமென இலங்கை துறைமுக அதிகாரசபை குழுவிடம் தெரிவித்துள்ளது. விலைதாரரின் கடனை இயங்காதிருக்கச் செய்யுமாறு இலங்கை துறைமுக அதிகாரசபை வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

III சைனா மேர்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் கம்பனி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கிடையிலான இணைந்த வர்த்தகமொன்றாக அரச தனியார் கூட்டு ( ) அடிப்படையில் முழு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தையும் இயக்குவதற்கான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு சீன அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

IV துறைமுக இயக்க உபகரணங்களுக்கான கொள்வனவுக் கட்டளை அனுப்புதலும் பெற்றுக்கொடுக்கப்படுதலும் நடைபெற்று வருகின்றன. ஆயினும் உபகரணங்களின் பெற்றுக்கொடுக்கப்படுதல்கள் 2018 ஆண்டின் இரண்டாம் தவணை வரை நடைபெறலாம்.

V கட்டம் 11 இன் நிர்மாண நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு 2017 ஏப்ரல் மாதம் வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### நிதிசார்ந்த முன்னேற்றம்

(அட்டவணை 17: நிதிசார்ந்த முன்னேற்றம - மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தி செய்திட்டம )

| விபரம் | மதிப்பிடப்பட்டுள்ள மொத்த ஆகு செலவு (ரூபா மில்லியன்) | 2016 டிசெம்பர் இறுதி வரை ஒன்றுசேர்ந்த கொடுப்பனவுகள் (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| **வெளிநாட்டு கடன் உதவி (FAL)** | **90,923** | **71,530** |

### 3.2.2.2 கப்பல்களுக்கான எண்ணெய் வழங்குதல் மற்றும் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி

இந்த செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த மூன்று வசதிகளும் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னரான பரீட்சிப்புகளும் 2013 ஆண்டில் முடிவடைந்துள்ளன.

### கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் கையாளல் வசதி - நிதிசார்ந்த முன்னேற்றம்

(அட்டவணை 18: நிதிசார்ந்த முன்னேற்றம-கப்பல்களுக்கான எண்ணெய் வழங்குதல் மற்றும் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி)

| விபரம் | மதிப்பிடப்பட்டுள்ள மொத்த ஆகு செலவு (ரூபா மில்லியன்) | 2016 டிசெம்பர் இறுதி வரை ஒன்றுசேர்ந்த கொடுப்பனவுகள் (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| **வெளிநாட்டு கடன் உதவி (FAL)** | 65.09 | **65.09** |
| **இலங்கை துறைமுக அதிகாரசபை** | 11.49 | **11.48** |
| **இலங்கை வங்கி (மேலதிக கடன்)** | 20.88 | **19.70** |
| மொத்தம் | 97.46 | 96.28 |

**திரவ பெற்றோலிய வாயு வசதி வழங்குவதற்கான லிட்றோ கேஸ் டேர்மினல்ஸ் லங்கா தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கை**

ஹம்பாந்தோட்டை எண்ணெய்த் தாங்கித் தொகுதியின் திரவ பெற்றோலிய வாயு வசதி மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் லிட்றோ கம்பனிக்கும் கூடிய வருமானம் ஈட்டிக்கொள்வதற்கும் சிலிண்டர்களில் நிரப்பும் பணிகளை அதிகரிப்பதற்கும் சிலிண்டர்களில் திரவ பெற்றோலிய வாயு நிரப்பும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு லிட்றோ கேஸ் கம்பனியால் முன்வைக்கப்பட்ட பிரேரணை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் குறித்த தொழிற்சாலை நிர்மாணிப்பதை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்லுமாறு இலங்கை துறைமுக அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. சிலிண்டர்களில் கேஸ் நிரப்பும் தொழிற்சாலைக்கான குறைநிரப்பு உடன்படிக்கை தொடர்பில் லிட்றோ கேஸ் கம்பனி தங்களது கருத்தை முன்வைத்துள்ளதோடு அதன்படி இலங்கை துறைமுக அதிகாரசபையும் உடன்படிக்கை தொடர்பான பணிகளை நிறைவு செய்து வருகின்றது. இது தொடர்பிலான அங்கீகாரத்தை எதிர்பார்த்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டது.

**பிரேரணைகளுக்கான கோரல் - கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் கையாளல் வசதி**

கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வர்த்தகத்தை விரிவாக்கும் பொருட்டு 03 விமான எரிபொருள் களஞ்சியத் தொகுதிகளும் உள்ளடங்கலாக கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதியினை தகுதியான இயக்குனரொருவருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதியினை கையாள்வது தொடர்பில் பிரேரணைகளை கோருவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணையத்தளம் மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஊடாக 2016 மார்ச் மாதம் 30 ஆம் திகதி உள்நாட்டில் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது.

2016.05.25 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை கூட்டத்தினதும் 2016.08.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அலுவலர்களின் குழுக் கூட்ட தீர்மானங்களுக்கமையவும் இலங்கை துறைமுக அதிகாரசபை பிரேரணைகளைப் பொறுப்பேற்பதை நிறைவு செய்து மதிப்பீட்டுச் செயற்பாட்டையும் இடைநிறுத்தியது. பிரேரணைகள் கோரலின் விபரங்கள் பின்வருமாறு

| பிரேரணைகள் கோரல் | பிரகடனப்படுத்தப்பட்ட திகதி | பிரேரணைகள் பொறுப்பேற்பின் இறுதித் திகதி | வழங்கப்படும் விலைக்கான ஆவணங்கள் | கிடைக்கப்பெற்ற பிரேரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதி கையாளல்** | 2016.03.30 | 2016.08..23 | 20 | 4 |

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் 2016.09.14 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது மதிப்பிடப்படும் செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு நிதி அமைச்சு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுகளினால் அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து பிரேரணைகளையும் மதிப்பீடு செய்யுமாறும் அதன் பெறுபேறுகளை பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவை குழுவிடம் தெரியப்படுத்துமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ஆயினும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவை குழுவின் ஆலோசனைகளின் படி 2016.11.22 ஆம் திகதி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்யாதிருக்குமாறும் தனியார் கம்பனிகளினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளை மாத்திரம் மதிப்பீடு செய்ய முடியுமெனவும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் தொழில்நுட்ப குழுவிற்கு அறிவித்துள்ளார்.

**பிரேரணைகளைக் கோருதல் (RFP) – 2016 ஏப்ரல்**

பிரேரணைகள் கோருவதற்கான 2016 (ஏப்ரல்) ஆவணம் 2016.04.25 ஆம் திகதியிலிருந்து தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டதோடு சாத்தியவள முதலீட்டாளர்கள் பிரேரணைகள் கோரலின் ஆவணத்தை வாங்கினார்கள். பொறுப்பேற்கப்பட்ட விலைகள் 2016.08.24 ஆம் திகதி திறக்கப்பட்டதோடு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

திரவ பெற்றோலிய வாயு முனைய செய்திட்டம் நிறுவுவதற்கு ஒத்தாசை வழங்கும் நோக்கில் லாப்ஸ் டேர்மினல்ஸ் கம்பனியுடனான தொடர்பு தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டது.

மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கான நீர் மற்றும் மின்சாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**காணிகளைக் கைப்பற்றிக் கொள்ளல்.:. கொள்வனவு செய்தல் (கட்டம் II)**

தேவைப்படும் காணிகள் மற்றும் மீள் குடியமர்த்துவதற்கான மாற்றுக் காணிகள் தற்போது அடையாளம் காணப்பட்டு ஆய்வுகள் மற்றும் மதிப்பீட்டுப் பணிகளும் முடிவடைந்துள்ளன. இது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரங்களும் பெறப்பட்டுள்ளன.

இதற்கு மொத்தமாக சுமார் ரூபா 2000 மில்லியன் தேவைப்படுகின்றது. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய பொது திறைசேரியிலிருந்து நிதி பெற்றுக்கொள்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட்டு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நஷ்டஈடு தொடர்பில் பொது திறைசேரியினால் 888 மில்லியன் ரூபா ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.2.3 காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்

### 3.2.3.1 காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் - கட்டம் - 1

**பௌதிகரீதியான முன்னேற்றம்**

அலைதாங்கிகளை நிர்மாணித்தல் , பிரவேச வழி மற்றும் முனையம் முன்னால் திருப்பும் தடாகம் தோண்டுதல் போன்றவை ஒட்டுமொத்த செய்திட்டத்தினுள் அடங்கும். வடிவமைப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஓரியன்டல் கன்ஸல்டன் கம்பனியுடனான (OCC) புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அலைதாங்கி நிர்மாணிக்கும் பணிகள் மீதியாகியிருக்கும் JICA வின் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கும் இரண்டாம் கட்டத்தில் அரச தனியார் கூட்டுரிமையில் ீ) பல்வித பணி நங்கூரத்தளமொன்று அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கீகார கடன் தொகை ஜப்பான் யென் மில்லியன் 14,495 ஆகும்.

**தற்போதைய நிலைமை**

இறுதி பிரேரணையின் அடிப்படையில் ஒரியன்டல் கன்ஸல்டன் கம்பனியினால் மேலதிக நகல் திட்ட அறிக்கை மற்றும் கேள்விவிலை ஆவணங்கள் I,II,III மற்றும் IV பாகங்களாக தயாரிக்கப்பட்டுள்ளன

கேள்வி விலை மதிப்பிடும் பணிக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படுவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேவைப்படும் அனுமதிகளும் தற்போது பின்வரும் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

- தேசிய மரபுரிமைகள் அமைச்சு
- தொல்பொருளியல் திணைக்களம்
- கரையோரம் பேணல் திணைக்களம் (நுஜயு)

திருத்தப்பட்ட விடய உள்ளடக்கத்துடனான செய்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்பார்க்கப்படுகின்றது.

### 3.2.3.2 காலி துறைமுகத்தில் படகுத்தளம்.ஃ உல்லாச படகுகள் பழுதுபார்த்தல்.ஃ கப்பல் நிர்மாண வசதிகளை ஏற்படுத்துதல்

| | |
|---|---|
| செய்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவு | - அமெரிக்க டொலர் 44 மில்லியன் |
| நிர்மாண காலப்பகுதி | - 24 மாதங்கள் |
| முதலீட்டாளர் | - ஹாடி ஹமாம் |
| குழுமமஇ சவுதி அரேபியா.திட்டப் பிரேரிப்பாளரின் பெயர் | - சீ கல்ப் ஷிப்ட்யாட் தனியார் கம்பனி (இலங்கை) |

**செய்திட்டத்தின் அடிப்படையான நோக்கங்கள்**

- உல்லாசப் படகுகள், பாய்மரக் கலங்கள் போன்றவற்றிற்கு வசதிகள் வழங்குவதற்காக 4500 தொன் கொண்ட சின்கோ மின் உயர்த்தியொன்றுக்கான (synco Lift) வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்

- பொமென்டரா (Formentera) வத்தை கிலன்சன்பார்க் துறைமேடையிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் தற்காலிகமாக 4500 தொன் அளவு கொண்ட மிதக்கும் கலங்களைப் பழுதுபார்ப்பதற்கான தடாகமொன்றை ஸ்தாபித்தல்இ வேலை செய்வதற்கான இடம் மற்றும் வேலைத்தளம் தொடர்பில் களஞ்சியசாலையொன்றை குத்தகைக்கு எடுப்பதற்கு அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் காணிகளின் உரிமைகள் மாற்றப்படும் கொள்கையின் படி இந்த நிலப் பகுதி 30 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குதல்

**இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும் அனுகூலங்கள்**

- காணிகளின் குத்தகைப் பணம், துறைமுக கட்டணங்கள் மற்றும் இறைமை கொடுப்பனவுகள் வருமானமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும்.
- காலி துறைமுகத்தில் உல்லாசப் படகுகளின் விருத்தி தொடர்பில் உல்லாசப் படகுகளின் பழுதுபார்த்தல் வசதி முக்கியமானதாகும்.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

இந்த செய்திட்டத்துக்கான வர்த்தக உடன்பாடு மற்றும் தளம் குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கைஇ இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சீ கல்ப் ஷிப்ட்யாட் (தனியார்) கம்பனிக்கிடையில் 2013 யூன் 06 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அதன்படி உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் திகதி 2013 யூலை 01 ஆம் திகதி ஆகும்.

செலுத்த வேண்டிய தொகையில் ஒரு பகுதி அபிவிருத்தியாளரினால் செலுத்தப்பட்டுள்ளதோடு வேலைத்தள நிலத்துக்கு அறவிடப்பட வேண்டியுள்ள குத்தகை வாடகை பணத்தில் செலுத்த வேண்டியுள்ள மீதித் தொகையும் முன்னைய ஆண்டுகளுக்கான வட்டியும் செலுத்த வேண்டியுள்ளன.

முதலீட்டாளர் உடன்படிக்கைக்கமைய செயற்படாததன் காரணமாக உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு இலங்கை துறைமமுக அதிகாரசபை தீர்மானித்தது. அதன்படி உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கம்பனியின் பங்குகளின் பாகங்களின் அளவில் மாற்றமேற்பட்டுள்ளதெனவும் முகாமைத்துவ உரித்துக்களை வோகர்ஸ் ஷிப்ட்யாட் தனியார் கம்பனி பெற்றுள்ளதெனவும் முதலீட்டாளர் அறிவித்துள்ளார். இலங்கை துறைமுக அதிகாரசபையினால் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் மீள் கவனத்திற் கொண்டு பணிகளை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்லப்படுவது தொடர்பில் புதிய முகாமைத்துவம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனுமதியை நாடியுள்ளது.

**3.2.4 திருகோணமலை துறைமுக அபிவிருத்தி**

திருகோணமலைக்கான எண்ணக்கருவிலான தோற்றவுருவின் பிரதான திட்டம் குறுகிய கால மற்றும் நீண்டகால செய்திட்டப் பிரேரணைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் செய்யப்பட்ட உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு அறிக்கை இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் கிடைத்துள்ளது.

ஓசியன்பிக் தனியார் கம்பனியின் முதலீட்டுப் பிரேரணைக்கேற்ப திருகோணமலை குடாவினுள் மீன் வளர்ப்பு செய்திட்டமொன்றினை ஸ்தாபிப்பதற்கும் இயக்குவதற்குமான வர்த்தக உடன்படிக்கையை இலங்கை துறைமுக அதிகாரசபை தயார் செய்யும் பணிகளை நிறைவு செய்துள்ளது.

திரவமாக்கப்பட்ட இயற்கை வாயு (LNG) முனைய செய்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளருடன் வர்த்தக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து நிலக்கரி மற்றும் கிலிங்கர் புகையிரதம் ஊடாக போக்குவரத்து செய்வதை முக்கிய செய்திட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அஸ்ரப் துறைமேடை வரை புகையிரதப் பாதையை அமைப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை இ திருகோணமலை மாவட்ட செயலாளர் மற்றும் புகையிரதத் திணைக்களமும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.5 இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான உத்தேச பிரதான அலுவலகக் கட்டடம்

பாவனையாளர்களின் சேவையின் தரம் மேம்படுத்தப்படுவதன் நோக்கில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து சேவைகளும் ஒரே கூரையின் கீழ் நிறைவேற்றப்படுவதற்கு இடமளிக்கப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான அலுவலகக் கட்டடம் அமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

**தற்போதைய முன்னேற்றம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு துறைமுகத்தின் ஆளணிகளுக்குத் தேவைப்படும் அலுவலக இடவசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் துறை காணி அபிவிருத்தியாளரொருவரின் பங்கேற்புடன் எண்ணக்கருவிலான தோற்றவுரு வர்த்தக மாதிரி தயாரிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. முதலீட்டாளர் முதலீடு செய்யும் தொகையை அவர் உழைத்துக் கொள்வார்

இதற்கான உகந்த இடமாக கனல் முனையமும் நிறுவனத்தின் தேவைப்பாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன கட்டடம் தொடர்பில் நிதி முதலீடு செய்யும் எண்ணக்கருவிலான தோற்றவுரு மாதிரி அடையாளம் காண்பதற்கான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

### 3.2.6. கொழும்பு துறைமுகத்தின் உள்ளக துறைமுக பாதை விரிவாக்குதல்

தெற்கு துறைமுக அபிவிருத்திப் பணிகள் முடிவடைதலோடு துறைமுகத்தினுள் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்படும் பாதைகளின் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்காக இங்குரு கடைச் சந்தியிலிருந்து வாசல் இல: 01 வரை தற்போதுள்ள 04 நிரல்களைக் கொண்ட உள்ளக துறைமுக பாதையை 06 நிரல்களாக விரிவுபடுத்த வேண்டியுள்ளது. பாதையின் விரிவாக்கலுக்கு இணையாக துறைமுக பிரதேசத்தில் தற்போது இருக்கும் 02 பாலங்களையும் துறைமுக அணுகு பாதையிலுள்ள புளுமெண்டல் வீதிக்கு ஊடாகச் செல்லும் பாலத்தையும் விரிவாக்குதல் வேண்டும்.

06 நிரல்கள் வரை பாதை விரிவாக்கப்படுவதற்கு தற்போதிருக்கும் கட்டடங்கள்இ அலுவலகங்கள்இ வேலைத்தளங்கள் மற்றும் வசதிகள் போன்றவை உடைத்து அகற்றி வேறு இடத்தில் நிறுவுவது அவசியமாகும். உள்ளக துறைமுக பாதையின் விரிவாக்கல் பணிகள் 2013 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு கட்டடங்களை உடைக்கும் பணிகள் முற்றாக முடிவடைந்த பிரதேசங்களில் நிர்மாண வேலைகள் கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திட்டத்தின் முன்னேற்றம்**

- ஹர்த்தால் பாலத்தின் விரிவாக்குதல் ரூபா 219 மில்லியன் ஆகு செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- சேவைகள் குழாய்கள் பதித்தல்இ மேற்றளத்தில் தார் படிவம் மற்றும் பாதை குறியீடுகள் இடுதல் உள்ளடங்கலாக பாதையின் 1.4 கிலோமீட்டர் வரையிலான நிர்மாணப் பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன. 1.2 கிலோமீட்டர் வரையிலான மீதித் தூரத்திற்கு மேற்றள தார் படிவம் இடும் பணி முடிவடைந்துள்ளது. 1.2 கிலோமீட்டர் தூர பாதையின் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(அட்டவணை 19: திட்டத்தின் முன்னேற்றம் - கொழும்பு துறைமுகத்தின் உள்ளக துறைமுக பாதை விரிவாக்குதல)

| இல | விபரம்.˙.பணி | முன்னேற்றம் ∴ ஆகுசெலவு | கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.˙. சிக்கல்கள் |
|---|---|---|---|
| 01 | வாசல் இல: 01 இருந்து ஹர்த்தால் பாலம் வரையிலான பாதை<br><br>(சங்கிலி 0+020 இருந்து 0 + 400 மீட்டர் வரை) | நிர்மாணப் பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன<br><br>மொத்த ஆகுசெலவு ரூபா 94.5 மில்லியன் ஆகும். | |
| 02 | ஹர்த்தால் பாலம் விரிவாக்குதல்<br><br>(சங்கிலி 0+400 0+540 மீட்டர் வரை) | நிர்மாணப் பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன<br><br>மொத்த ஆகுசெலவு ரூபா 219.0 மில்லியன் ஆகும் | |
| 03 | இலங்கை கப்பல் தளம்இ ரங்கல இருந்து எரிபொருள் நிரப்பும் நிலையம் வரையிலான பாதை<br>(சங்கிலி 0+840 இருந்து 1+260 மீட்டர் வரை) | கட்டம் 1 இன் நிர்மாணப் பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன. மேற்றளத்தின் தார் படலம் வரையில் பாதையின் மற்றும் தரைப் பக்கத்திலுள்ள சேவைகள் வழங்கும் குறுகிய வழியின் நிர்மாணப் பணிகள் ரூபா 112.5 மில்லியன் மொத்த ஆகுசெலவில் நிறைவடைந்துள்ளன. | கட்டம் 11 கடல் நோக்கியுள்ள சேவைக் குழாய்கள் மற்றும் தார் படலம் வரை அமைக்கப்பட வேண்டியுள்ளது முகாமைத்துவ தீர்மானங்களுக்கேற்ப செய்திட்டம் மாற்றப்பட்டுள்ளது. |
| **04.** | எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்து கப்பற்சரக்கு நிலையம் -03 (CFS -03) வரையிலான | கட்டம் -1 சேவைகள் வழங்கும் குழாய்கள் அடங்கலாக மேற்றள தார் படலம் வரையிலான | |

| | | | |
|---|---|---|---|
| | பாதை (சங்கிலி 1+260 இருந்து 1+700 மீட்டர் வரை) | பாதையின் நிர்மாணம் ரூபா 61.0 மில்லியன் ஆகுசெலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>கட்டம் 11 – சேவைகள் வழங்கும் குழாய்கள்இ100 மீட்டர் நீளமான மேடை வழி மற்றும் 400 மீட்டர் தூரத்துக்கு தார் படலம் இடுதல் போன்றவை 2015 யூலை மாதம் ரூபா 53.0 மில்லியன் மொத்த ஆகு செலவுக்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>ஒப்பந்தக்காரர் வேலைத்தளத்தில் ஊழியர்களை ஈடுபடுத்தியுள்ளதுடன் 44.9 ரூபா மில்லியன் மொத்த ஆகுசெலவில் வேலைகள் முற்றாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. | |
| 05. | வைத்திய நிலையத்திலிருந்து கப்பற்சரக்கு நிலையம் - 03 வரையிலான பாதை<br><br>(சங்கிலி 1+700 இருந்து 2+060 மீட்டர் வரை) | அமைச்சு விலைகோரல் சபையின் கீழ் விலைகோரல் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.<br><br>கேள்விலையின் மதிப்பீடு முடிவடைந்து அமைச்சு விலைகோரல் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 06 | வைத்திய நிலையத்திலிருந்து ஜய கொள்கலன் முனையம் 1 வரையிலான பாதை (சங்கிலி 2+060 இருந்து 2+460 மீட்டர் வரை) | 75.0 மில்லியன் ரூபா மொத்த ஆகு செலவுக்கு விலைகோரல் 2014 யூன் மாதம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>51.1 ரூபா மில்லியன் முழு ஆகுசெலவுக்கு பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன. | |
| 07 | ஜய கொள்கலன் முனையம் - 1 இருந்து சமர்ஹில் பிரதேசம் வரையிலான பாதை (சங்கிலி 2+460 இருந்து 3+160 மீட்டர் வரை) | மேற்றள தார் படலம் வரையிலான பாதை அமைக்கும் பணிகள் முற்றாக முடிவடைந்துள்ளன. எஞ்சிய வேலைகளுக்கான திட்டமிடல் மற்றும் விலைகோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டும் வருகின்றன. | முகாமைத்துவத்தின் தீர்மானங்களுக்கேற்ப செய்திட்டம் மாற்றப்பட்டுள்ளது. |
| 08 | சுரங்க வாசலிலிருந்து (வுரநெட புயவந) பழைய சேரம் வாசல் வரையிலான பாதை (சங்கிலி 3+340 இருந்து 4+020 மீட்டர்) | திட்டமிடல் மற்றும் விலைகோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | |

### 3.2.7 துறைமுக பிரவேச பாதை விரிவாக்குதல்

#### 3.2.7.1 புளுமெண்டல் வீதியூடான தற்போதுள்ள பாலம் விரிவாக்கப்படுதல்

உள்ளக துறைமுக பாதை விரிவாக்கும் செய்திட்டத்தின் கீழ் புளுமெண்டல் வீதியூடான தற்போதுள்ள பாலம் விரிவாக்கப்பட வேண்டியுள்ளது. 2014 டிசெம்பர் மாதம் ரூபா 30.0 மில்லியன் மொத்த ஆகுசெலவில் தள அத்திவாரமிடலின் தூண்களின் ஆழமான பதிப்பு வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

நில மட்டத்தின் கீழான அமைவுகளினதும் நில மட்டத்தின் மேல் விசேட அமைவுகளினதும் நிர்மாண வேலைகள், 2015 சனவரி மாதம் ரூபா 50.0 மில்லியன் மொத்த ஆகு செலவில் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. செய்திட்டமும் முடிவடைந்துள்ளது. இதுவரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள தொகை ரூபா 24.3 மில்லியன் ஆகும்.

#### 3.2.7.2 துறைமுக பிரவேச பாதை விரிவாக்குதல்

மண் பற்றிய பரீட்சிப்புகள் முடிவடைந்துள்ளதோடு பாதை விரிவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தற்போதைய நிலத்தின் கீழுள்ள சேறு கொண்ட மண் படிவங்களை மேம்படுத்தும் வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளன எனவே மண் மேம்பாடு மற்றும் பாதை விரிவாக்கும் வேலைகளை திட்டமிடுவதற்கு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடமிருந்து (CECB) பிரேரணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு மத்திய விலைகோரல் சபையினால் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடம் குறித்த பணிகள் ஒப்படைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மண் பரீட்சிப்பு முடிவடைந்து திட்டமிடலுக்கான நகல் அறிக்கை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 3.2.8 கொழும்பு துறைமுகத்தில் மேடைகள்இ முனையங்களில் கல் பதித்து தார் இடும் வேலைகள்

#### 3.2.8.1 வழிகாட்டிப் பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடை

வழிகாட்டிப் பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடை போன்றவை பாரிய குழிகளினால் முற்றாக கீழிறங்குவதன் காரணமாக இது துறைமேடைகள் மற்றும் பாலங்களின் கையாளல் பணிகளுக்கு தாக்கமேற்படுத்துகின்றன. தற்போதிருக்கும் வழிகாட்டிப் பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடையின் மேற்பரப்பின் மேம்பாடு மற்றும் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

#### 3.2.8.2 ஜய கொள்கலன் முனையம் - 3 இன் புனரமைப்பு

அநேகமான கொள்கலன் அடுக்கும் பிரதேசங்கள் மற்றும் பாதைகளின் சில பிரதேசங்கள் கீழிறங்கியுள்ளதால் தற்போதிருக்கும் கொள்கலன் அடுக்கும் முனையம் உள்ளடங்கலான ஜய கொள்கலன் முனையம் - 3 இலுள்ள பாதைகள் புனரமைக்கும் தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. முனையத்தின் அன்றாட கொள்கலன் கையாளல் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் புனரமைப்புப் பணிகள் கட்டங்களாக இடம்பெறுகின்றன.

இப்பணிகளுள் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கப்பட்டிருக்கும்.

- கீழிறங்கியுள்ள இறப்பர் டயர்களைக் கொண்ட கென்ட்ரி பாரம்தூக்கியின் கொங்கிறீட் பாதையை உயர்த்தி உரிய நிலையில் அமைத்தல்
- கீழிறங்கியுள்ள கொள்கலன் அடுக்கும் இடங்களை உயர்த்தி உரிய நிலையில் அமைத்தல்
- தற்போதிருக்கும் பாதையின் வழிகளுக்கு கடினமான மேற்றள தார் படலம் இடுதல்
- முனையங்களின் நிலத்தில் அடையாளமிடுதல்கள்

**செய்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு**

(அட்டவணை 20; திட்டத்தின் முன்னேற்றம் - ஜய கொள்கலன் முனையம் - 3 இன் புனரமைப்பு)

| இல | பணி ∴ விபரம் | முன்னேற்றம் ∴ செலவினம் |
|---|---|---|
| 01 | வழிகாட்டிப் பாலத்தில் கற்களை பதித்து தார் போடும் பணிகள் | 49.6 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவுக்கு செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 02 | பண்டாரநாயக்க துறைமேடையில் கற்களை பதித்து தார் போடுதல் கட்டம் I | 24.73 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவுக்கு செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 03 | பண்டாரநாயக்க துறைமேடையில் கற்களை பதித்து தார் போடுதல் கட்டம் II | வெற்றிகர ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு செய்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 04 | ஜய கொள்கலன் - 03 முனையத்தின் R மற்றும் S வழிகளை மீளமைக்கும் பணிகள் | செய்திட்டம் முடிவடைந்துள்ளதோடு இதுவரை 38.04 மில்லியன் ரூபா கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 05 | ஜய கொள்கலன் - 03 முனையத்தின் DM மற்றும் N வழிகளை மீளமைக்கும் பணிகள் | ஒப்பந்தக்காரரொருவரைத் தெரிவு செய்து கொள்வதற்கு பத்திரிகை விளம்பரம் ஊடாக விலைகோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விலைகோரல் வழங்குவதற்கு விலைகோரல் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு விலைதாரரை பரிந்துரைத்துள்ளது.<br><br>விலைகோரலை ஒப்படைப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |
| 06 | இளவரசர் விஜய மேடையில் கற்களைப் பதித்து தார் போடும் பணிகள் | ஒப்பந்தம் வெற்றிகர ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. |

### 3.2.9 ஒலுவில் கரையோரத்தின் மண் அரிப்பு தொடர்பிலான விரிவான ஆய்வுகள்

ஒலுவில் துறைமுகத்திற்கு அப்பால் அமைந்துள்ள வடக்கு எல்லையில் தற்போது ஏற்பட்டு வரும் மண் அரிப்புஇ தெற்கு எல்லையில் தெற்கு அலைதாங்கி நெடுகே பாரியளவில் மணல் குவிதல்இ உட்பிரவேச கால்வாயினுள்ளும் சுற்றுப்புறங்களிலும் சேற்றுப் படிவு அகற்றுதல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இந்த பணிகளின் ஆரம்பமாக ஒலுவில் கரையோரத்தின் மண் துணிக்கைகளின் நகர்வின் போக்கு மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் பரிகாரங்களாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைத் தயாரிப்பதற்கும் விரிவான பொறியியல் ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் நிதியுதவி வழங்கும் முகவர் நிறுவனமான டென்மார்க் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு (DANIDA) குறித்த ஆய்வு தொடர்பில் நிதியுதவி வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது.

வெற்றிகர ஆலோசகரான டென்மார்க்கின் வ.்.ப டனிஸ் ஹய்ரொலிக் நிறுவனத்திடம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளரினால் ஏற்றுக்கொண்டதற்கான கடிதம் (Letter of Acceptance) வழங்கப்பட்டு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டனிஸ் ஹய்ரொலிக் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் ஆய்வுப் பணிகள்இ வேலைத்தள பரீட்சிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் இறுதிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.2.10 கப்பற்சரக்கு நிலையம் 01 (ஊகுளு - 01) இன் களஞ்சியம் மீளமைத்தல்

2013 ஆண்டின் மே மாதம் தீப்பற்றியதன் காரணமாக பாதிப்படைந்த கப்பற்சரக்கு நிலையம் - 01 இன் களஞ்சியத்தின் மீளமைப்புப் பணிகள் 2016 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

மொத்த செய்திட்டத்திற்குமான செயற்பாட்டுத் திட்டமும் கால வரையறையும் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டு 2016.08.01 ஆம் திகதி களஞ்சியத்தின் முதல் பாகத்தின் நிர்மாண வேலைகள் நிறைவு பெற்று 2016.08.10 ஆம் திகதி சேவைகள் வழங்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. களஞ்சியத்தின் இரண்டாம் பாகத்தின் நிர்மாண வேலைகள் 2017 சனவரி மாத இறுதியில் நிறைவு செய்யப்பட உள்ளன.

- தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டதாக களஞ்சியத்தின் முதல் பாகத்தின் 45 மீட்டர் ஒ 52.5 மீட்டர் வரையிலான நிர்மாணங்கள் முடிவடைந்துள்ளன. 600 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மாடிக் கட்டடத் தொகுதி இரண்டு பக்கமும் 2.5 மீட்டர் மேடைகளைக் கொண்ட 1800 சதுர மீட்டர் இடவசதி கொண்ட களஞ்சியம் மற்றும் சேவைகள் வழங்கும் பணிகளுக்கான மின்மாற்றிகளையும் இது கொண்டிருக்கும். தற்போது சேவைகள் வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

- பிரதான உருக்கு சட்டங்கள்இ கூரை மற்றும் கூரை மூடுகை போன்றவற்றின் நிர்மாணிப்புகள் நிறைவடைந்துள்ளன.

### 3.2.11 ஒலுவில் கரையோரம் பேணல் நடவடிக்கைகள் - ஒலுவில் விடுமுறை விடுதியையும் நிலத்தையும் பாதுகாக்க வேண்டியுள்ள அவசியப்பாடு

#### 3.2.11.1 கட்டம் 1 – 150 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் அமைத்தல் (விடுமுறை விடுதி அமைந்துள்ள பிரதேசம்)

2009 ஆண்டில் துறைமுகத்தில் அலைதாங்கி அமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து வடக்கு பிரதேசத்தில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. ஒலுவில் துறைமுக செய்திட்டத்தின் திட்டமிடலாளரான லங்கா ஹய்ரொலிக் நிறுவனம் பரிந்துரைத்தவாறு கடல் மட்டத்திலிருந்து (4.0) மீட்டர் ஆழத்துடனான சுமார் 2 கிலோமீட்டர் கொண்ட கரையோரப் பிரதேசம் உள்ளடக்கப்படும்வாறு 2012 ஆண்டில கடலில் 3 அலைதாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டதோடு வடக்குப் பிரதேசத்தில் கடலரிப்பு ஓரளவு குறைந்துள்ள போதிலும் தொடர்ந்தும் அது வடக்குப் பிரதேசத்தை நோக்கி பரந்து செல்கின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் விடுமுறை விடுதி அமைந்துள்ள பிரதேசத்தில் இதனால் கடுமையான தாக்கம் ஏற்பட்டும் நீர்த்தாங்கி , தடுப்புச் சுவர், கழிவுத் தொட்டி, கழிவகற்றல் தொகுதி போன்றவற்றிற்கு பாதிப்பேற்பட்டும் விடுதி அருகில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது 300 மீட்டர் தூரம் வரை கற்களைப் பதித்து தயார் செய்வதற்கு கரையோரம் பேணல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தக்காரரிடமிருந்து விலைகோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் விடுமுறை விடுதியைப் நீளத்தில் சுமார் 150 மீட்டர்) பாதுகாக்கும் அவசர நடவடிக்கையாக சென்ற வருடத்தில் ஒலுவில் வெளிச்சவீடு சுற்றுப் பிரதேசம் பாதுகாக்கப்படும் பொருட்டு கரையோரம் பேணல் திணைக்களத்தினால் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விலைகோரல்கள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்கள விலைகோரல் சபையின் அங்கீகாரத்தின் மீது அவசர காப்புப் பணிகளை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு செயலாளரின் உடன்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டது. ரூபா 4,986,320.20 ஆகு செலவில் தற்போது பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்

- பாரிய பாறாங்கற்கள் மற்றும் சிறிய கற்களை வழங்குதல்.
- நிலத்தள பாதுகாப்பு சீலைநார் படலம் (Geo Textile) வழங்குதல் மற்றும் பரப்புதல்
- தடுப்புச் சுவரை அமைப்பதற்கு சிறிய மற்றும் பாரிய பாறாங்கற்களை உரிய இடத்திற்கு கொண்டு வருதல்

#### 3.2.11.2. கட்டம் II – 160 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் அமைத்தல் (விடுமுறை விடுதியிலிருந்து அலுவலர்களின் உத்தியோகபூர்வ இல்லம் வரை)

விடுமுறை விடுதியிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினது உத்தியோகபூர்வ இல்லம் வரையிலான 160 மீட்டர் தூரத்தை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரதான தேவைப்பாடாக இனம் காணப்பட்டதன் காரணம் குறித்த பிரதேசத்தில் கடலரிப்பினால் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளமையே ஆகும்.

இயந்திர உபகரணங்கள்/ டிப்பர் வண்டிகள் வாடகைக்கு எடுப்பதற்கு பதிவு செய்யப்பட்ட வழங்குனர்ளின் பட்டியல் கரையோரம் பேணல் மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திலிருந்து பெறப்பட்டு 160 மீட்டர் நீளமான தடுப்புச் சுவரை நிர்மாணிப்பதற்கு பதிவு செய்யப்பட வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்**

- பாரிய பாறாங்கற்கள் மற்றும் சிறிய கற்களை வழங்குதல்.
- நிலத்தள பாதுகாப்பு சீலைநார் படலம் (Geo Textile) வழங்குதல் மற்றும் பரப்புதல்
- தடுப்புச் சுவரை அமைப்பதற்கு சிறிய மற்றும் பாரிய பாறாங்கற்களை உரிய இடத்திற்கு கொண்டு வருதல்

